www.tamilarangam.net


சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே -பாரதி

உள்ளே:




இதழ் 58 | ஒக்.27-நவ.09,1994 | விலை7/=

# காமினியின் மீள் வருகை அச்சுறுத்தியது யாரை?



எதிர்கட்சித் தலைவரும், ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திசநாய்க்காவும் அவருடன் மேடையிலிருந்த பலரும் பாலத்துறை குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலத்த சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

அதேவேளை இக்கொலையினால் ஏற்பட்டுள்ள அனுதாப அலையை சிறப்பாகப்பயன்படுத்தி ஐக்கிய தேசியக்கட்சிக்கு அரசியல் லாபம் தேடும் முயற்சியில் காமினியின் முக்கிய சகாக்கள் இறங்கியுள்ளனர். இதன் விளைவாகவே கொல்லப்பட்ட காமினி திசநாயக்காவின் மனைவியான சிறிமா அவர்களை புதிய ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சி நியமித்துள்ளது. எதிர்கட்சித் தலைவராக ரணில் நியமிக்கப்பட்ட போதும் புதிய ஜனாதிபதி வேட்பாளராக சிறிமா நியமிக்கப்பட வேண்டும் என்பதற்காக காமினி அணியினர் ஸ்ரீகொத்தாவில் ஒரு போராட்டத்தையே நடத்தியிருந்தனர்.

நடந்து முடிந்த காமினியின் கொலைக்கான சூத்திரதாரிகள் யார் என்ற விசாரணையில் ஈடுபட்டுவரும் பொலிஸ் மற்றும் புலனாய்வுத்துறையினர் சார்பில் கொலை தொடர்பாக விளக்கமளித்த பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வா கொலைக்கான காரணங்களாக பலவிதமான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுவதாக குறிப்பிட்டிருந்தார். இக் கொலையைப் புலிகளே செய்திருக்கலாம் என்றும், ஐ.தே.கட்சியின் உட்பகை காரணமாக இது நடந்திருக்கக் கூடும் என்றும், பிற தமிழ் இயக்கங்களது உதவியுடன் இது நடந்திருக்க வாய்ப்புண்டு என்றும் கூறப்படும் கருத்துக்களை அவர் விபரித்தார். ஆயினும் தீர்க்கமான விசாரணை இன்றி இது தொடர்பான ஒரு முடிவுக்கு வரமுடியாது என்பது அவரது அபிப்பிராயமாக இருந்தது.

கடந்த ஆறு மாத காலத்துக்குள் காமினி திசநாயக்காவின் அரசியல் நடவடிக்கைகள் மிகுந்த வேகத்துடன் முன்னேறி வந்தன. ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்தின் பின், ஐ.தே.கவுடன் உறவைப் புதுப்பித்துக் கொண்ட அவர் மிகுந்த பிரயத்தனத்தின் பின் கட்சியில் சேர்ந்து ஒரு எம்.பிப் பதவியைப் பெற்றுக் கொண்டார். இவரை உள்ளே எடுப்பதற்காக ஐ.தே,கட்சி தனது கட்சிச் செயலாளரையே பதவியை விட்டு விலக்க வேண்டி ஏற்பட்டது.

கட்சிக்குள் மீளப் புகுந்த காமினி திசநாயக்கா, அதற்குள் தனது சக்திகளை மிகவும் வேகமாக உள்வாங்கி தனக்கென ஒரு அணியை உருவாக்கிக் கொண்டார். பாராளுமன்றத் தேர்தலின் பின் தானே ஒரு புதிய அரசை உருவாக்குவதற்கு முயற்சியும் செய்தார். முடியாத போது எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக போட்டி போட்டு வெற்றியும் பெற்றார். கட்சியின் பிரதித் தலைவர் பதவியையும் பெற்றுக் கொண்டார்.

ஆக, இந்த இடைக்காலத்தில், காமினி இப்பதவிக்கு வருவதற்காக பலரது பதவிகளை பறிக்கவும், பலரை அவமானப்படுத்தவும் வேண்டியிருந்தது.

கட்சியின் முக்கியஸ்தர்களான முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் சிறிசேன குரே ஆகியோரது பலத்த எதிர்ப்பையும் இவர் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

காமினி திசநாயக்க, தனது வாழ்நாளில் இல்லாதவாறு கட்சியின் பலமான சக்திகளது எதிர்ப்பைப் பெற்றுக் கொண்டிருந்தார்.

ஐ.தே.கட்சியின் வரலாறு கூட, அரசியல் எதிரிகளை ஆயுத முனையில் அல்லது வேறு வழிகளில் எதிர்கொள்ளாத ஒன்றாகக் கூறமுடியாது. லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்ட போது அது புலிகளால் செய்யப்பட்டதென்ற ஊகம் இங்கு எழவில்லை. ஐ.தே.கவே திட்டமிட்டு செய்துள்ளதாகவே பொதுவான அபிப்பிராயம் நிலவியது.

சனநாயக தேர்தல் வழிமுறையைக் கொண்டிருப்பதாக கூறிய போதும் ஐ.தே.க தனது வெற்றிகட்கு ஜனநாயக விரோத வழிகளை தொடர்ந்து கடைப்பிடித்து வந்ததற்கான சான்றுகள் நிறைய உண்டு.


தவிரவும், காமினி திசநாயக்காவின் இந்திய சார்பு நிலைப்பாடு, இலங்கை - இந்திய ஒப்பந்த தீர்வை தொடர்ந்தும் வலியுறுத்தும் அவரது கருத்துக்கள் யாழ் நூலகம் எரிக்கப்பட்டதுடன் அவர் சம்பந்தப்படுத்தப்பட்டு வந்த அபிப்பிராயங்கள், அண்மைக்கால சமாதானப் பேச்சுக்களின் போது அவர் பேசி வந்த இனவாதப் பேச்சுக்கள் (அவர்களுக்கு மின்சாரமும் பற்றியும்; இவர்களுக்கு பாணும் பருப்பும்!) போன்றவை புலிகளுக்கும் இவர்மீது பகைமையை ஏற்படுத்தியிருந்திருக்கக்கூடும்.

மொத்தத்தில், காமினி திசநாயக்க, ஐ.தே.க கட்சிக்குள் ரணில், சிறிசேன குரே குழுவினருடனும் தான் உருவாக்கிய கட்சியை சிதைத்தமையால் லலித் குழுவினருடனும், இந்திய சார்பு நிலை காரணமாக புலிகளுடனும் என்று அனைத்து சக்திகளதும் எதிர்ப்பை பெற்ற ஒருவர் என்பதும், பதவிக்கு வருவதற்காக அவர் கடைப்பிடித்த வழிமுறைகள் மிகவும் அவப்பெயர் பெற்றவையாக அமைந்ததன் காரணமாக மக்கள் மத்தியிலான செல்வாக்கை இழந்திருந்தார் என்பதும் கவனிக்கப்படுகையில் இக் கொலை எக்காரணத்தால் யாரால் செய்யப்பட்டிருக்கலாம் என்று ஊகிப்பது மிகவும் கடினமானதே. கொலை நடந்த இடத்து தடயங்கள் கொலையாளிகளைப் பிடிக்க உதவுமானால், கொலையின் பின்னாலிருந்த நோக்கங்களை விளங்கிக் கொள்ள முடியும்.

பத்திரிகைகள், செய்தி நிறுவனங்கள், தொடர்பு சாதனங்கள் எல்லாம் தமது விருப்பிற்கேற்ப கொலையாளிகள் அவர்களே என்று அடித்துக் கூற முற்பட்டுள்ளன. தேர்தல் காலம் என்பதால், தமது கட்சிகளின் நலன்களுக்காக ஒவ்வொருவரும் தமக்கு சாதகமான கருத்துக்களையே பிரச்சாரம் செய்கின்றனர். இங்கு உண்மை எது என்பது யாருக்கும் முக்கிய

தொடர்ச்சி
இறுதிப்பக்கம்...






காமினி திசநாயக்க


ஜீ.எம்.பிரேமசந்திர


கிறிஸ்டி பெரேரா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# இடைநிறுத்தப்பட்ட நியமனம் குறித்து கல்வியமைச்சுக்கு ஓர் கடிதம்

1994இல் வடக்கு கிழக்கில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகமாக உள்ள இடத்திற்கு நியமிப்பதற்கென 1992இல் நடைபெற்ற பயிலுனர் ஆசிரியருக்கான போட்டிப் பரீட்சையில் இருந்து 72பேர் தெரிவு செய்யப்பட்டு 1993 இறுதியில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. இவர்களுள் 12பேருக்கான நேர்முகப் பரீட்சை 1992.12.3இல் மட்டக்களப்புக் காரியாலயத்தில் நடைபெற்று இவர்கள் அனைவரும் தகுதி உடையவர்களென தெரிவு செய்யப்பட்டு உடன் நியமனம் வழங்குவதாகக் கூறி கல்விச் சான்றிதழ்கள் உட்பட அனைத்து மூலப் பிரதிகளையும் பெற்றுள்ளனர். ஆனால் இவர்களுள் 4 பேருக்கு மாத்திரம் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மீதி எட்டுப் பேருக்குமான நியமனங்களும் எதுவித காரணங்களுமின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதே சமயம் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இம் மாவட்டத்தில் 1175 ஆசிரியர் வெற்றிடங்கள் இருப்பதாகக் கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இது தொடர்பாக மாவட்டக் கல்விப் பணிப்பாளரிடம் கேட்ட போதும், மாகாண சபையிடம் கேட்ட போதும், இதனை இடைநிறுத்தியது தாங்களல்ல; கல்வி அமைச்சே எனத் தெரிவித்தனர். கல்வி அமைச்சிடம் இது குறித்து கேட்ட போதிலும் எந்த வித பதிலும் தரப்படவில்லை. மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரூடாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு இரு தடவைகள் கடிதம் அனுப்பினோம். அதற்கும் பதிலில்லை.

அமைச்சு ஏன் தகுதி உடையவர்களின் நியமனத்தை இடை நிறுத்தியுள்ளது? எங்களுக்கு வடக்கு, கிழக்கு கல்வி அமைச்சின் செயலாளர் அவர்களின் வகிமா/கஅ/க.செய/ஆநி/24ம் இலக்கமும் 1993.11.23ம் திகதியும் கொண்ட கடிதத்திற்கு அமையவே நேர்முகப் பரீட்சை நடைபெற்றது என்பதையும் குறிப்பிடுகின்றேன். அத்துடன் 15.11.93இல் எங்களுக்கு, நாங்கள் 1992இல் பயிலுனர் ஆசிரியருக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளோம் எனக் கல்வி அமைச்சின் செயலாளராலும் தனித் தனியே கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் தினகரனில் 1993 டிசம்பர் மாதத்தில் வெளியான இதழ் ஒன்றில் நியமனம் வழங்க இருந்த 72பேரின் பெயர்ப் பட்டியலும் வெளியாகி உள்ளன.

இது குறித்து கடந்த காலங்களில் ஜனாதிபதி உட்பட பிரதம மந்திரிக்குக் கூடக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளோம். அவர்களும் அவற்றிற்கு பதில் தரவுமில்லை. புதிய கல்வி அமைச்சராவது இது குறித்து கவனம் செலுத்துவாரா?



இரா.இன்பராஜா
வாழைச்சேனை.



# எதார்த்தத்திலிருந்து பீறிடுவதே நவீன கவிதை

58வது சரிநிகரில் என் ஆணலை என்ற கவிதையைப் பற்றி எழுதிய கடிதம் ஒன்று பிரசுரமாகியிருந்தது. மிகவும் பரிதாபத்திற்குரிய கடிதம் அது. இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தைப் பற்றியோ- சரிநிகரின் பண்புகள் பற்றியோ, நவீன தமிழ்க்கவிதை பற்றியோ, முக்கியமாக நாங்கள் இறந்திறந்து வாழும்; சிங்கள அரசின் கூலிப்படைகளாலும், ஆயுதம் தாங்கிய தமிழ்க்குழுக்களாலும் சிதைந்து கொண்டிருக்கும் எம் தாய் பூமி பற்றியோ எதைப் பற்றியுமே தெளிவின்றி எழுதப்பட்டிருந்தது அக்கடிதம். எனினும், வாசித்து முடிந்த போதுஒன்றுமட்டும்தெளிவானது- இவருக்கு நவீன தமிழ்க் கவிதை பற்றி எதுவும் தெரியாது.

இவரது கடிதத்திற்கு பதில் எழுதும் முயற்சியில் நான் ஈடுபட முனைந்தேனாகில் நவீன தமிழ்க் கவிதை பற்றிய ஒரு பரிபூரணமான நூலை எழுத வேண்டிய நிலைக்கு அது என்னை இட்டுச் செல்லும்.

இவரது கடிதத்தின் ஒரிடத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 'கவிதை செய்வது'... என்ற வாசகந்தான் கவிதை பற்றிய புரிதலை உணர்த்திற்று.

இன்றியமையாமையிலிருந்து எழுவது.

இன்ன அளவில், இத்தனை வரிகளில், அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்கள் என்று குறித்த சில தமிழ்ச் சொற்களை தவிர்த்து தேசம் முழுக்க தீப்பிடித்து மானுடம் நொறுக்கப்படுகிற, வயிறு பற்றியெரிகிற நிலைமைகளிலும் பூக்களின் மலர்வையும், நதிகளின் அழகுகளையும், சாத்தியமேயற்ற குழந்தைகளின் சிரிப்பையும், பனிக்கூதலின் சிலிர்ப்பையும் பற்றி மட்டுமே பாடிக் கொண்டிருக்கும் பம்மாத்து அல்லது போலி ''சென்டிமென்ற்'' அல்ல நவீன கவிதை. எதார்த்தத்திலிருந்து பீறிடுவதே அது.

என்.ஆத்மா
காத்தான்குடி

# இது நான் பாடிய கவிதை!

உலக கவிதைப் போட்டியில் -அதுவும் வானத்தை எல்லையாக் கொண்டதில் குறைந்தது 300 சொற்களாவது கொண்ட கவிதைகளை எதிர்பார்த்தேன். 42 சொற்களுடன் முதற்பரிசை தட்டிச் சென்ற கவிதை என்ன சொல்கின்றது?

எச்சில் விழுங்கும் இரவுகள்
இதன் பொருள் என்ன? எதன் குறியீடு?

கவிதை கூறுபவன் யார்? யாருக்கு கூறுகிறார்? எதை -எதில் எரிக்க கோருகிறார்? பின்பு ஏன் அழச் சொல்கின்றார்? ஏன் மீண்டும் மீண்டும் உயிர்ப்பு (மீட்சி)? ஒரு முறை போதாதா. அல்லது உண்மையிலேயே விளிக்கப்பட்டவர் இறந்து விட்டாரா? புத்துயிர் பெற்றவர் ஏன் ஒரமாய் ஒதுங்க வேண்டும்.

ஐயா எனது அறிவீனம் காரணமாக கேட்கின்றேன். தயவு செய்து விளக்கம் கூறுங்கள்.

3வது பரிசுக் கவிதை: (நாடோடிகள்) சிகரட் புகை வளையங்கள், யன்னல் தாண்டி -மரமெல்லாம் தாண்டி குடிம்னைகளின் கூரையையும் தாண்டி (நல்ல வேளை தாண்டிக் குளத்தையும் தாண்டவில்லை) போகுமா? கடற்கரையில் கிரிக்கட்டா? அலைதாவுமிடத்தில் விக்கட்டா? கவிதைகள் செத்துக் கொண்டு போகின்றன. 100% உண்மை கவிதையில் -சஞ்சலம் கிலேசம் என்று வந்தால் கவிஞன் செத்துப் போய்விடுவாரா?

நண்பர்கள் வெளிநாட்டுக்கு போனால் தானும் போக வேண்டும். இல்லையேல் வடக்கிலிருந்து சாக வேண்டும். இவன் ஒரு கவிஞன் இவனை பாடிய நட்சத்திரன் ஒரு கவிஞன் -அவருக்கு பரிசு கொடுக்க ஒரு சரிநிகர் - கவிதைகள் செத்துக் கொண்டு போகின்றனவா?

முதற்பரிசுக் கவிதையில் ஒருவன் நொண்டியாய் காத்திருக்கின்றார். இரண்டாவது பரிசுக் கவிதையில் -பிணமொதுங்கிய நினைவு வர கடற்கரையை விட்டு ஓடுகிறார் - ஒருவர். மூன்றாவது கவிதையில் சாகலாமா வெளிநாடு ஓடலாமா என்று அலைபாயும் ஒரு கவிஞன்.

உங்கள் கவிதைப் பொருளுக்கு வானமல்லவா எல்லை? செயலற்ற / ஒதுங்குகின்ற / யாரோ செய்வான் என்று காத்திருப்பவர்கள் வானத்தை தொடமாட்டார்கள். ஏன் நிலத்தை விட்டே கிளம்பமாட்டார்கள்.

உங்கள் கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற கவிதைகளினால் ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சியினால் நான் பாடிய கவிதை கீழே.

## கிடத்தல்

*கரப்பான் பூச்சி கவட்டுக்குள்*
*நுழைய*
*விழித்து எழுந்தேன்.*
*இருட்டுக்குள் முகட்டைப் பார்த்து*
*கிடந்து*
*அலுத்து விட்டது.*
*ஆடைத் தொழிற்சாலைக் கோபுரமணி*
*ஒன்று அடித்து இரண்டும்*
*அடித்து விட்டது.*
*அதற்குள் முகட்டெலி*
*முகத்தில் மூத்திரமும் அடித்து விட்டது.*

*உயிர் மணிகளைத் தோலுரித்துச்.*
*சப்பித் துப்பும்*
*அரிசி ஆலையின் இரைச்சல்*
*கேட்டது.*
*பாம்பு தவளையை கௌவ*
*அதன் மரண ஓலம்*
*உறுமித் திரியும் ஹெலியின் படபடப்பு.*

*காலை நீட்ட கறிச்சட்டி*
*முட்டும்*
*கையைப் பின்னுக்கு போட்டால்*
*முட்டியைத் தட்டும்*
*மேசைக்கால்.*
*நவீன துட்ட கைமுனு நான்.*

*சரி கொஞ்சம் கவிதை படிப்போமா?*
*விளக்கை கொளுத்தி*
*வைரமுத்துவின் கவிதைப் புத்தகத்தைத் திறக்க*
*மூலையில் சுருண்டு*
*கிடந்த*
*மகள் சிணுங்கினாள்*
*அப்பா விளக்கை நூர்த்துப் போட்டுப் படுங்கோ.*
*மறுகணம் இருட்டு*
*காத்துக் கிடக்கிறேன்*
*எப்போது விடியுமெனக்கு?*

எப்படி படிமங்கள்? குறியீடுகள் (Symbols) விசேடம். ஹெலி தொடக்கம் எலி மூத்திரம் வரை குறியீடுகள் தான்.


சாதாரண வச்னங்களை முறித்துக் கவிதையாக்கிய எனது கவித்துவம் எப்படி? தலைப்பு அதிவிசேடம் (இருத்தல் மாதிரி) இந்தக் கவிதையை (?) எழுத எடுத்த நேரம் 15 நிமிடம்.

அடுத்த கவிதைப் போட்டி (பிரபஞ்சத்துக்கும் அப்பால்) எப்போது? இன்று கையில் கிடைத்த (ஒக்டோபர்13-26) சரிநிகரில் ''ஒரு கவிஞனின் வாக்குமூலம்'' என்ற கவிதை சரிநிகரில் நான் வாசித்த கவிதைகள் அனைத்திலும் சிறந்ததாக உணர்கிறேன்.
உஸ்மான் மரிக்காருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.
அடுத்த கவிதையைப் படிக்க முகம் பார்க்கும் கண்ணாடி தேடிக் கொண்டிருக்கின்றேன்.

ந.கிருஷ்ணராசா
வவுனியா

## முரண்.

*அரசியல்வாதிக்கு*
*அஞ்சல் தலைவெளியீடு!*
*இளைஞர் கூட்டம்*
*கொதித்தெழுந்தது:*
*எங்கள் தேசத்தையே*
*கெடுத்து குட்டிச்சுவராக்கியவனுக்கு*
*கௌரவமா?*
*-ரவுடிக்கு ராஜமரியாதையா?*
*-மூதேவிக்கு முத்திரை வெளியீடா?*
*மௌனித்திருந்த ஞானி வாய்மலர்ந்தான்*
*'இல்லை*
*அதுதான்*
*அந்த அயோக்கியனுக்கு தக்க தண்டனை'*
*'?'-இளைஞர் கூட்டம்.*
*முகத்திலே கரி;*
*முதுகிலே எச்சில்*
*போதாதா?*



உஸ்மான் மரிக்கார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'கவனம் செலுத்த வேண்டியது வெளித்தோற்றத்திலல்ல மையப் பிரச்சினைகளிலேயே!'

செப்.25 அன்று ரூபவாஹினியில் நடைபெற்ற ''இன்றைய நிலையில் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை சிங்கள மக்களுக்கு விளக்குதல்'' என்ற தலைப்பில் தாங்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் ஒன்றைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

சிதைக்கப்பட்டுள்ள இனங்கட்கு இடையிலான உறவு மீள கட்டியெழுப்பப்பட வேண்டிய தேவையை உணர்ந்து ''மேர்ஜ்'' செயற்படுவது போற்றுதற்குரியது. அதற்காக சரிநிகர் பத்திரிகையும், யுக்திய பத்திரிகையும் தம்மால் இயன்றவரை உழைப்பதுவும் விதந்து குறிப்பிடத்தக்கது..

இருந்த போதிலும் ரூபவாஹினியில் நடைபெற்ற நிகழ்ச்சியை அவதானிக்கும் போது இப்பிரச்சினையில் தங்களின் அணுகுமுறை தொடர்பாக சில சந்தேகங்களை கிளப்ப வேண்டிய நிலையில் தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

முதலாவதாக பறைத்தமிழர், மோட்டுச் சிங்களவன், மஞ்சள் துண்டிற்கும் கழுத்தறுப்பவன் சிங்களவன் போன்ற சொற்பதங்கள் இனங்கட்கிடையில் எவ்வாறு அர்த்தப்படுத்தப்படுகின்றது. அதன் இனத்துவரீதியான தாக்கம் என்ன என்பவற்றை அருமையாக விளங்கப்படுத்தினீர்கள்.

ஆனபோதிலும் ஒன்றைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன், அதாவது ''மடையா'' என்னும் சொற்பதம் தமிழில் பேச்சுவழக்கில் உள்ள ஒன்று. அதை நட்பை வெளிப்படுத்தவும் அல்லது நட்புரீதியான கண்டிப்பை வெளிப்படுத்தவும் உபயோகிக்க முடியும். அதேநேரம் கோபத்தை அல்லது உறவுரீதியான கசப்புணர்வை வெளிப்படுத்தவும் உபயோகிக்கலாம் என்பதை தாங்கள் அறிவீர்கள். இதிலிருந்து சொல்ல விரும்புவது என்னவெனில் பிரச்சினையின் வெளித்தோற்றத்தில் நேரத்தை செலவிடுவதை விடுத்துஅதன்உள்பிரச்சினையில்- மையமான கருத்தியலில் கவனத்தை செலுத்த வேண்டும் என்பதையே! அதைமுதலில் செய்ய வேண்டும். அதைவிடுத்து இது போன்று வெளிப்பிரச்சினையோடு மட்டும் நிற்பதால், இதுபோன்ற உரையாடல்கள் பிரயோசனமற்ற ஒன்றாகூவ இருக்கும்.

முதலில் தமிழர் தாயகம் வட-கிழக்கு இணைப்பு, இதை எடுத்துக் கொள்வோம். தமிழ் எழுத்தாளர்களைப் பற்றிச் சொல்லும் போது நீங்களே ஒன்றைக் குறிப்பிட்டீர்கள்.

அறுபதுகளிற்கு முன் யாழ்ப்பாணியம், சீதனம் இவை தொடர்பாகத் தான் அவர்களின் கருத்தியல் இருந்தது என்று. அதாவது தமிழ்த் தேசியம் பற்றி அவர்கள் அக்கறை காட்டவில்லை, அல்லது அப்படியொரு கருத்தியல் தோன்றவில்லை. அறுபதுகளிற்கு முன் வெள்ளையர் ஆட்சியில் சிங்கள மக்களை விடுவிக்க தமிழ் சட்டத்தரணிகள் போன்றோர் வியாபார நோக்கின்றி வாதாடியிருக்கின்றனர். நாடு சுதந்திரமடைந்த காலப்பகுதியில் தமிழ்த் தேசியவாதிகள் சிலர் இருந்திருக்கலாம். இருந்திருந்தாலும் அவர்கட்கு மக்களிடம் ஆதரவு இருந்திருக்காது. ஆகவே அதன் வளர்ச்சி என்பது இருந்தேயிராது.

ஆனால் இலங்கையின் முதலாவது பிரதமராக D.S சேனநாயக்கா அவர்கள் இருந்தபோது திரு.டட்லி சேன்நாயக்க அவர்கள் சொன்ன முக்கியமான கருத்து ஒன்று உள்ளது. அதாவது தற்போது சிங்களத்தில் ''வெலிஓயா என்று அழைக்கப்படும் மணலாற்று பகுதியை யார் தம்வசம் வைத்திருக்கின்றார்களோ அவர்களே, இலங்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்க கூடியவர்கள்'' என்று. அதாவது மணலாற்று பகுதி சிங்கள மக்களிடம் இருந்தால் ஒன்றுபட்ட இலங்கை பாதுகாக்கப்படும். தமிழர்களிடம் இருந்தால் நாடு பிளவுபடும் என்று கூறினார்.

இதைச் சிலர் தீர்க்கதரிசனம் என்று கூற முற்படலாம். தமிழ்தேசியம் என்ற கருத்தியல் தோற்றம் பெறும் என்று அன்றே சிங்களத் தலைமைகள் எதிர்பார்த்தார்கள் என்றால், அவர்கள் எவ்வளவு தூரம் இனவாதிகளாக இருக்கப் போகின்றார்கள் என்று அன்றே தீர்மானித்து விட்டார்கள் என்பதைத்தான் காட்டுகிறது. யதார்த்தத்தை புரியாதவர்கள் தான் அதை தீர்க்க தரிசனம் என்பார்கள். தமிழ் மக்களின் ஐக்கிய இலங்கை கோட்பாட்டுக்கு எதிராக சிங்கள இனவாதிகள் டட்லியை பிடித்து கொண்டு தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் குடியேற்ற முற்பட்டமை, இலங்கையை சிங்களவர்களின் நாடு என வர்ணித்தமை, தனிச் சிங்களச் சட்டம் என்பவைதான் தமிழ்தேசியத்தின் தோற்றத்திற்கு வித்திட்ட காரணிகள். இங்கே குடியேறுவதையும், குடியேற்றுவ்தையும் சேர்த்து குழப்பிக் கொள்ளக் கூடாது. இலங்கையெங்கும் வாழ்வதற்கு தமிழர்கட்கு உரிமை இருப்பது போல, சிங்கள மக்களுக்கும் உரிமை உண்டு. அதை தமிழ் தேசியவாதிகள் கூட ஏற்றுக் கொள்கின்றார்கள். ஆனால் ஒரு இனம் பாரம்பரியமாக வாழும் பிரதேசத்தில் அரசியல் நோக்கங்கட்காக மற்றோர் இனம் குடியேற்றப்படுவதை ஜனநாயகம் என்று ஏற்று கொள்ள முடியாது. ஆன காரணத்தால் திரு.மனோரஞ்சன் அவர்களே இந்த விடயத்தை முதலில் நீங்கள் தீர்க்க முற்பட வேண்டும். போதாக்குறைக்கு இந்த அடிப்படை உரிமையை பாதுகாப்பதற்காக ஏறக்குறைய முப்பதாயிரம் தமிழ் மக்கள் பலியாகி விட்டார்கள் என்பதையும் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்தது கல்வி; நாடு சுதந்திரமடைந்த காலத்தில், நாட்டின் உயர்துறைகளில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வேலை செய்து கொண்டிருந்தனர். கல்வியிலும் சிறந்து விளங்கினார்கள். இது ஏற்பட பிரித்தானியாவின் பிரித்தாளும் கொள்கை ஒரு காரணமாக இருந்திருந்தாலும் அது மட்டும் தான் காரணமல்ல என்பதுவும் வெளிப்படை. இலங்கை ஒரு நாடாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்றவர்கள் கல்விக்காக தமிழர்கட்கு மட்டும் தடையேற்படுவதை எவ்வாறு ஏற்றுக் கொள்கின்றார்கள் என்று புரியவில்லை. இலங்கை என்பது ஒரு நாடாயின் நாம் எல்லோரும் ஓரினம். அவ்வாறு இருக்க எவ்வாறு தமிழ் மக்களை மட்டும் கட்டுப்படுத்த முடியும்.

சிலர், பெரும்பான்மையான சிங்கள மக்கள் செலுத்தும் வரியில் இயங்கும் பல்கலைக்கழகங்களில் எவ்வாறு பெரும்பான்மையாக தமிழர்கள் கல்வி கற்க முடியும் என்று வினவுகின்றனர். தமிழர்கள் ஆரம்ப காலங்களில், தம்மை இலங்கையர்கள் என்று கருதினார்களே தவிர தாங்கள் வேறோர் இனம் என்று கருதவில்லை. ஆனால் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இனவாத அரசுகள் தமிழர் - சிங்களர் என்று பிரித்து பார்க்க தொடங்கியதும் அரசின் நடவடிக்கைகளால் நொந்து போயிருந்த தமிழ் மக்கள் பிரிவினையைப் பற்றி சிந்திக்க வேண்டியேற்பட்டதேயொழிய தமிழ் மக்கள் என்றுமே இனவாதிகளாக இருக்கவில்லை. திரு. மனோரஞ்சன் அவர்களே, இவ்விடயத்தில் தங்களின் அணுகுமுறை யாது? அரசின் நடவடிக்கையை சரியென்று கூறுவீர்களா இல்லை பிழைதான் என்பீர்களா? இருந்தாலும் உங்களின் முடிவில் தான் வரலாற்று அசைவியக்கம் தீர்மானிக்கப்படும் என்று நினைத்து விடாதீர்கள்.

1983 கலவரத்தை விடுங்கள், 1958, 1977 இருவருடங்களிலும் தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதேன்? மொழியை, பண்பாட்டை வளர்க்கின்ற தமிழராய்ச்சி மகாநாட்டை குழப்பினார்களே ஏன்? பெரும்பான்மையாக தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணத்தில் அல்லது மட்டக்களப்பில் தான் தமிழாராய்ச்சி மகாநாடு முடியும். அதை விடுத்து கொழும்பில் எவ்வாறு மகாநாட்டை நடாத்த வேண்டுமென்று முடிவெடுத்திருக்க முடியும். அதைவிட எமது பண்பாட்டில் மற்றவர்கள் எவ்வாறு தலையிட்டிருக்க முடியும்?

இருந்தாலும் சிங்கள மக்களில் பெரும்பான்மையானவர்கள் சிறந்தவர்கள், நல்லவர்கள். ஆனால் பேரினவாதிகளும் பாராளுமன்ற ஆசனம் தான் இலட்சியமாகிப் போய்விட்ட அரசியல் வாதிகளும் தான் குட்டையைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மீறி தாங்கள் உங்கள் இலக்கை அடைய முடியுமென்று கருதுகின்றீர்களா? வரலாறு உங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று பிரார்த்திருக்கின்றோம்.

**எதார்த்தன்**
**மொறட்டுவ**

# ஆக்கிரமிப்பல்ல தற்காப்பே!

சரிநிகர் 45ல் சுதந்திரம் கிட்டும், ஆனால் அது எப்போது என்று ஒரு யுத்த அனுபவம் எழுதப்பட்டிருந்தது.

'இவானா பெனாஸ்' என்பவள் மத்திய பொஸ்னியாவைச் சேர்ந்த 'பிலா' என்ற குரேஷியக் குக்கிராமத்தின் 12வயதுச் சிறுமி. முஸ்லீம் படைகளின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு, வெளியேற முடியாமல் இருக்கும் அச்சிறுமி, பிரான்ஸிலுள்ள தனது பள்ளித் தோழிக்கு எழுதிய கடிதமே இது!

மேற்படி கடிதத்துக்குத் தரப்பட்ட இம் முன்னுரை பற்றி சரிநிகர் -48ல் **எது ஆக்கிரமிப்பு? யார் ஆக்கிரமிப்பாளர்?** என்ற தலைப்பில் எனது கருத்துக்களை எழுதியிருந்தேன். மேற்படி யுத்த அனுபவத்தை சுவிஸிலிருந்து மொழி பெயர்த்த திரு.அழகு குணசீலன் அவர்கள், இது தொடர்பான தனது கருத்துக்களை **யார் செய்தாலும் ஆக்கிரமிப்பே** என்பதாக சரிநிகர் -55ல் எழுதியிருந்தார். இது பற்றி சில கருத்துக்களை முன்வைக்கும் அவசியத்தினால், இக் கடிதம் எழுத நேர்ந்தது.

இன்று ஜனநாயகரீதியாக நடைபெறுகிற உலக மாற்றங்களை, போராட்டங்களை கொச்சைப்படுத்த முற்படுகின்ற, உண்மைக்குப் புறம்பான கருத்துருவங்களை தோற்றுவித்து பரப்புகின்ற சர்வதேச வெகுசனத் தொடர்பு சாதனங்களை நாம் அலட்சியமாகக் கருத முடியாது. இவ்வடிப்படையில் தான் முன்னுரையில் கூறப்பட்ட **முஸ்லீம் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும்** என்ற விடயத்தையும் கருதினேன்.

திரு.குணசீலன் அவர்கள் குறிப்பிடுவது போல, இது இன, மத மொழி சார்ந்த அணுகுமுறையாகவும் இருக்கலாம். ஆனால், நாம் எதிர்பார்த்தது- அது நடைமுறை யதார்த்தத்தைச் சுட்டும் வரிகள் தானா? என்பதே (இவ்வாறு சிந்தித்ததற்காக என்னை அடிப்படைவாதியாக அழகு குணசீலன் அவர்கள் அடையாளங் கண்டுள்ளார். எனது கவனமெல்லாம் 'இவானா'வின் யுத்தகால அனுபவத்தின் மீதல்ல. அதை அடையாளப்படுத்த முற்பட்ட பத்திரிகையாளர் மீதுதான்.

ஒரு தற்காப்புப் போரை, ஆக்கிரமிப்பு என்ற வார்த்தை மூலம் கொச்சைப்படுத்தியிருப்பதைத்தான் ஜீரணிக்க முடியவில்லை, தமிழ் பேசும் மக்களது உரிமைப்போரை, சிங்கள மக்கள் மீதான ஆக்கிரமிப்பு, இலங்கை ஒருமைப்பாட்டிற்கெதிரான அத்துமீறல்... என சிங்கள இனவாத அரசு பிரச்சாரப்படுத்த முனைந்தால்.... இதுதான் பொஸ்னியாவில் நடைபெறுகிறது.

நீண்ட காலமாக கம்யூனிஸ ஆட்சியின் கட்டுப்பாடுகளில் தேசிய இனங்கள் சிக்கியிருந்தாலும், மதரீதியாக பெரிதும் முஸ்லீம்களே பாதிக்கப்பட்டனர். பின் யூகோஸ்லாவியா பிளவுண்ட போது சேர்பிய, குரேஷிய இனங்களின் மிருகத்தனமான ஒடுக்குதலை எதிர் கொள்ள நேர்ந்தது.
பொஸ்னியா முஸ்லீம் மக்களின் யுத்தப் பின்னணி இதுதான்.

இங்கு குறிப்பிட விரும்புவது- திட்டமிட்ட அடக்குமுறை பொஸ்னியாவில் முதல் முறையாக முஸ்லீம்கள் மீது மேற் கொள்ளப்பட்டது என்பதை அழகு குணசீலன் அவர்கள் ஏற்றுக் கொள்வாராயின்,

திணிக்கப்பட்ட யுத்தத்தை, தற்காப்புக்காக எதிர்கொள்ளும் போது ஏற்படும் சண்டையை எவ்வாறு ஆக்கிரமிப்பாக நாம் கருத முடியும்? எனக் கேட்க விரும்புகின்றேன். யுத்தத்தில் எல்லா மக்களும் பாதிக்கப்படுவர் எனினும் யுத்தத்தை தோற்றுவித்தவர்களே, அதனால் ஏற்படும் மனித சோகங்களுக்குப் பொறுப்பாளிகள் என்பதே எனது நிலைப்பாடு.

காரண காரியங்களை ஆராயும் திறனை 12 வயதான இவானாவிடம் எதிர்பார்ப்பதற்கில்லை. போரில் அச்சிறுமிக்கு ஏற்பட்ட மனித இழப்பு, அறுத்தெறியப்பட்ட அவள் கிராமம், சிதைக்கப்பட்ட அவளின் கனவுகள்.... இவற்றுக்கெல்லாம் ஒரு முஸ்லீம் போர் வீரன்தான் பொறுப்பாளி என்றால் அச்சிறுமியின் பார்வையில் அவனொரு கொலையாளி/ ஆக்கிரமிப்பாளன். (ஆனால் கடிதத்தில் தனது யுத்தக் குற்றவாளிகளை இவானா தெளிவுபடுத்தவில்லை.)

போரை அவள் வெறுக்கிறாள்; போரிடுபவர்களை சபிக்கிறாள். தனது யுத்த அனுபவங்களூடாக இவானா வேண்டுவதெல்லாம் 'போர் வெல்லப்பட்டு, மனித நேயம் மலர்ந்த புதிய பொஸ்னியா எனும் ஆதர்ஷக் கனவுகள் என்றே நான் நினைக்கிறேன். இவை தாம் தாகமும் அது உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி, இதுவே எல்லோரது எதிர்பார்ப்பும், பிரார்த்தனையுமாகும்.

யுத்தத்தில் சேர்பியர்கள் முஸ்லீம்களைத் தாக்கலாம். முஸ்லீம்கள் சேர்பியரை பழிவாங்கலாம்; குரேஷியரும் அடிக்கலாம். போர் என்று வந்து விட்டால் அனைவரும் யுத்தக் குற்றவாளிகளே! ஆனால் - யுத்தத்துக்கு பொறுப்பாளி யார்?

இதுதான் எனது தேடல்.
முடிவாக,

அழகு குணசீலன் அவர்கள் குறிப்பிடுவது போல் போரின் நியாய தர்மங்களை/ இழப்புகளை முன்வைக்கும் கருத்துச் சுதந்திரம் என்னைவிட இவானாவுக்கு உண்டு. ஏனெனில், இவானா பொஸ்னியாவைத் தாயகமாகக் கொண்டவள். பாதிக்கப்பட்ட யாருமே தமது அவலங்களை/ முறையீடுகளை மனித சமூகத்தின் முன் வைக்க உரித்துடையவர்களே. இதை ஏற்றுக் கொள்கிறேன். அதேவேளை,

ஆக்கிரமிப்புக்கும், தற்காப்புப் போருக்கும் இடையிலான வேறுபாட்டில் தெளிவு காண முற்பட்டதே இக் கடிதத்தின் நோக்கம், என்பதை அழகு குணசீலன் அவர்களும் விளங்கிக் கொள்வார் என நம்புகிறேன்.

**ஏ.ஜீ.எம்.ஸதக்கா**
**வாழைச்சேனை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கிழக்குப் பல்கலைக் கழகம்: தேய்கிறது!

மட்டக்களப்பு பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டே(1981) மாணவர்கள் பல்வேறு வகையான நெருக்கடிகளையும் வசதியீனங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர். ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகையில் இங்குள்ள மாணவர்களின் வாழ்க்கை சாதாரண பாடசாலை வாழ்க்கையை விட சுவாரசியம் குறைந்ததாக இருக்கின்றது. பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு வரும் ஒவ்வொரு மாணவரும் பலவிதமான எதிர்பார்ப்புகள் கனவுகளுடன் பல்கலைக்கழகத்தினுள் காலடி எடுத்து வைப்பது வழக்கம். ஆனால் இப் பல்கலைக்கழகத்திற்கு வரும் மாணவர் ஒவ்வொருவரும் ஏன் வந்தோம்? என நினைத்து பல்கலைக்கழக வாழ்க்கையையே வெறுக்குமளவுக்கு விரக்தியடைந்துள்ளனர். தற்போது சுமார் 700 மாணவர்கள் விவசாயம், விஞ்ஞானம், வணிகம், கலை ஆகிய நான்கு பீடங்களிலும் கல்வி பயில்கின்றனர்.

பாடசாலை வகுப்பறைகளையே விரிவுரை மண்டபங்களாகப் பயன்படுத்த வேண்டிய நிலை, நாற்பது பேர் உட்கார இடவசதிகொண்ட நூலகத்தில் நானூறு பேர் உட்கார்ந்து படிக்க வேண்டிய நிலை, விடுதிகள் என்ற பெயரில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறிக் காணப்படும் வீடுகளுக்குள் மாணவர்கள் முடங்கிக் கிடக்கும் நிலை, விசேட கற்கை நெறிகளைப் போதிப்பதற்கு போதுமான சிரேட்ட விரிவுரையாளர்கள் இல்லாத நிலை, பாடசாலை விளையாட்டு மைதானத்தை சகல விளையாட்டுக்களுக்கும் பயன்படுத்துகின்ற நிலை, வைபவங்களை நடத்த ஒழுங்கான மண்டபமில்லாத நிலை, எல்லாவற்றையும் விட பல்கலைக்கழக சூழலே இல்லாத நிலை -இவைதான் இங்குள்ள மாணவர்களின் வாழ்க்கை. உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு ஒருவித சகிப்புத் தன்மைக்கு மாணவர்கள் உட்பட்டு விட்டார்கள். இவர்களின் அபிலாசைகள், ஆசாபாசங்களைப் பற்றி சிந்தித்துப் பார்க்க எவருமேயில்லை.

ஒப்பீட்டுரீதியில் வந்தாறுமூலையில் அமையப்பெற்றுள்ள விவசாய, விஞ்ஞான பீடங்கள் ஓரளவுக்கு வசதிகளுடன் காணப்படும் அதேவேளை, மட்டக்களப்பு நகரில் இயங்கும் கலை, வர்த்தக பீடங்களின் நிலைமை மிகப் பரிதாபகரமானதாகும். இங்கு மாணவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் சொல்லுந்தரமன்று. இந்நிலைக்கு யார் பொறுப்பு? பல்கலைக்கழகத்தை இந்நிலைக்குத் தள்ளிய காரணிகளைப்பிட்டு சற்று ஆழமாக நோக்குவது அவசியமானதாகும். ஏனெனில் பல்கலைக்கழகமென்பது ஒரு தேசிய நிறுவனமாகும். அது தேய்வது என்பது உற்று நோக்கப்பட்ட வேண்டியதொரு விடயம்.

அரசியல் சுழியில் சிக்கி அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்பட்டமையும், பல்கலைக்கழக நிர்வாகத்தின் மந்தமான போக்குமே இதற்குக் காரணமாகும். 1990ல் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் பல்கலைக்கழகத்திற்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தின. அகதிமுகாமாகப் பல்கலைக்கழகம் பாவிக்கப்பட்டதும், பெறுமதியான சொத்துக்கள் களவாடி சேதமாக்கப்பட்டதும் பாரிய நஷ்டத்தை உண்டு பண்ணின. இவ்வேளையில் இங்கு பயின்று கொண்டிருந்த முஸ்லீம் மாணவர்களும் இடம்பெயர்ந்து சென்றனர். இதன் பின்னர் அபிவிருத்திப் பணிகளை அரசாங்கம் இடைநிறுத்தியது. பல்கலைக்கழகம் அமைந்துள்ள வந்தாறுமூலையில் புதிய கட்டிடங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்க அரசாங்கம் மறுத்ததோடு, சகல இன மாணவர்களும் அச்சமின்றி தமது உயர்கல்வியைத் தொடரக்கூடிய வகையில் சகலருக்கும் பொதுவான பாதுகாப்பான ஓரிடத்தில் கட்டிடங்களை நிறுவ உதவி வழங்கத் தயார் எனவும் கூறியது.

எனினும் வந்தாறுமூலையில்தான் அனைத்துப் பல்கலைக்கழகமும் அமைய வேண்டும் என்ற பல்கலைக்கழகப் பேரவையின் விடாப்பிடி காரணமாக எவ்வித அபிவிருத்தியும் ஏற்பட வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இத்தனைக்கும் இரு பீடங்கள் (கலை, வர்த்தகம்) மட்டக்களப்பு நகரிலுள்ள சிங்கள மகாவித்தியாலயத்திலும், புதிய வீதியிலமைந்துள்ள பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான ஓர் கட்டிடத்திலும் இயங்கி வருவது யாவரும் அறிந்ததே. இவ்விரு பீடங்களிலும் முஸ்லீம் மாணவர்கள் தொடர்ந்து கல்விகற்று வந்தனர். பல்கலைக்கழக நிர்வாகம் விட்டுக் கொடுத்திருந்தால், எங்கேயாவது அபிவிருத்தி ஏற்படட்டும் என்ற மனப்பான்மை இருந்திருந்தால் இவ்விரு பீடங்களாவது மட்டக்களப்பு நகரை அண்மித்துள்ள கல்லடி அல்லது ஊறணி போன்ற பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ சாதகமான அனைத்து காரணிகளும் காணப்படுகின்ற இடங்களில் சகல வசதிகளுடனும் அமைத்திருக்கலாம். அதுவும் கை கூடவில்லை. அல்லது விடாப்பிடியாக நின்றவர்கள் வந்தாறுமூலையிலாவது முன்னரேயே கட்டிடங்களை அமைத்து தேவையான வசதிகளை உருவாக்கியிருக்கலாம். அதுவும் நடைபெறவில்லை. 1982ல் அமைப்பதாக திட்டமிடப்படிருந்த விஞ்ஞான ஆய்வு கூடமும் இதுவரை அமைக்கப்படவில்லை. இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியைக் கூட அரசாங்கம் மீளப் பெற்றுவிட்டது. மிக அண்மையில் தான் அதில் ஒரு பகுதியைத் தந்துதவி ஆய்வு கூடத்தின் முதலாம் கட்ட வேலையைத் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் இன்னும் நிர்மாணப் பணி தொடங்கவில்லை.

**ஆர்.பத்மநாதன்**
தலைவர்
மாணவர் ஒன்றியம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
மட்டக்களப்பு.

தற்போது அரசாங்கம் மாறியுள்ளது. கிழக்குப் பிராந்திய அபிவிருத்தியில் புதிய அரசாங்கம் மிகுந்த கரிசனை கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. செப் 28 அன்று கௌரவ கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான அவர்களை எமது மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் சந்தித்து பல கோரிக்கைகளை முன்வைத்தனர். அனைத்தையும் கவனமாக ஏற்றுக்கொண்ட அமைச்சர் விரைவில் பல்கலைக்கழகத்தைப் பார்வையிட வருவதாக உறுதியளித்துள்ளார். பல்கலைக்கழக நிர்வாகமும், ஆசிரியர் சங்கமும் கூட அமைச்சரைச் சந்தித்துப் பேசியுள்ளன. எனவே விரைவில் அபிவிருத்திக்குச் சாதகமான ஒரு நிலை பிறக்கும் அறிகுறி தெரிகிறது. இவ்வேளையில் மாணவர்கள் சார்பாக சில விடயங்களை சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெளிவாக எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் தொகையில் கணிசமானளவு முஸ்லீம் மாணவர்களும் உள்ளடங்கியுள்ளனர். 1990 கலவரங்களுக்குப் பின்னர் இம்மாணவர்கள் இடம்பெயர்ந்து சென்றதனால் மாணவர் தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கு இது ஒரு தடையாகவும் இருந்தது. தற்போது இவ் வருடத்திலிருந்து முஸ்லீம் மாணவர்கள் மீண்டும் அனுமதிக்கப்படுகின்றனர். அதுவும் மட்டக்களப்பு நகரில் இயங்கும் கலை, வர்த்தக பீடங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர். வந்தாறுமூலையிலமைந்துள்ள விஞ்ஞான, விவசாய பீடங்களிலிருந்து முன்னர் இடம்பெயர்ந்து சென்ற சில மாணவர்கள் தற்போது மீண்டும் வந்து கல்வியைத் தொடர்ந்தாலும் இவ்விரு பீடங்களுக்கும் புதிதாக முஸ்லீம் மாணவர்கள் இன்னும் அனுமதிக்கப்படவில்லை. பல்கலைக்கழக



மானிய ஆணைக்குழு இவ்விடயத்தில் பாரபட்சமாக நடப்பது ஏன் என்று புரியவில்லை. மேலும், எதிர்காலத்தில் சிங்கள மாணவர்களும் (1983 வரை சிங்கள மாணவர்கள் இங்கு கல்விகற்றனர்) அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே மாணவர்களின் பேரவா ஆகும். குறைந்த பட்சம் அம்பாறை, திருகோணமலை போன்ற கிழக்குப் பிராந்திய பகுதிகளிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் சிங்கள மாணவர்களையாவது இப்பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகத்தின் பிரதான போதனா மொழியாக ஆங்கிலம் இருப்பதனால் இது சகலருக்கும் சாத்தியமாகிறது. அத்துடன் புதிதாக ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள மருத்துவ பீடத்தை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே எதிர்காலத்தில் எவ்வகையான பிரச்சினைகள் ஏற்பட்டாலும் இடம்பெயர்ந்து செல்லாமல் சகல இன மாணவர்களும் பாதுகாப்பாக தமது கல்வியைத் தொடரக்கூடிய வகையில் அபிவிருத்தி துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், பல்கலைக்கழக விவகாரங்களில் வெளியாரின் அநாவசிய தலையீடுகள் நிறுத்தப்பட வேண்டும். பல்கலைக்கழக அபிவிருத்திக்குச் சாதகமான தலையீடுகளாயின் அவை வரவேற்கத்தக்கவை. ஆனால் பல தலையீடுகள் அபிவிருத்திக்கு குந்தகம் விளைவிப்பதாகவே அமைகின்றன. உதாரணமாக மட்டக்களப்பு பல்கலைக்கழக அபிவிருத்திச் சபை என ஒரு அமைப்பு இருக்கிறது. இவ்வமைப்பு இதுவரை காலமும் அபிவிருத்திக்கு என்ன செய்தது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இடையிடை எப்போதாவதிருந்து விட்டு சில அறிக்கைகள், செய்திகள் விடும் இவர்களில் யாராவது ஒருவர் இது வரை இங்கு வந்து மாணவர்கள் அனுபவிக்கும் இன்னல்களைப் பார்த்தார்களா? பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி குன்றிய நிலையினைப் பார்த்தார்களா? ஏதாவது ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தார்களா? இல்லவேயில்லை. பின்னர் எதற்காக இவ்வமைப்பு? ஒரு சிலர் தமது தனிப்பட்ட நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இதனை அமைத்து செயற்படுகின்றார்களா எனச் சந்தேகம் கொள்ள வேண்டியிருக்கிறது.

அடுத்து, இப்பகுதி அரசியல்வாதிகள் அரசாங்க உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களையும் வேலைவாய்ப்பு பிரச்சினைகள் பற்றியே பாராளுமன்றத்தில் கதைப்பதுடன் அவற்றில் ஈடுபட்டும் வருகிறார்களே தவிர, இம் மாவட்டத்திற்கென வரப்பிரசாதமாய் அமைந்துள்ள இவ் உயர்கல்வி நிறுவனத்தைப் பற்றி மூச்சு விடுகிறார்களில்லை. ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மட்டும் ஓடிவந்து குட்டையைக் குழப்புவதுடன் நின்று விடுகிறார்கள். மோசமான நிலையில் உள்ள இப் பல்கலைக்கழகத்தைப் பற்றி பாராளுமன்றத்தில் அவர்கள் குரல் எழுப்பாதது மிகுந்த வியப்பைத் தருகின்றது.

எனவே, உயர்கல்வியில் அக்கறை கொண்ட அனைவரையும் பார்த்து மாணவர்கள் சார்பாக மிக உருக்கமாக வேண்டுவது யாதெனில், இதயசுத்தியுடன் இப்பிரச்சினையை அணுகுங்கள். மாணவர்களின் அபிலாசைகள், ஏக்கங்களை கருணையுடன் மனிதாபிமானத்துடன் நோக்குங்கள், மாணவர்களின் இருண்ட எதிர்காலத்தை ஒளிபெறச் செய்யுங்கள். கோப தாபங்கள், பேதங்களை மறந்து செயற்படுங்கள். உயர்கல்வி நிறுவனம் ஒன்று இவ்வாறு சீரழிந்து போவது சமுதாய சீர்கேட்டுக்கு சமனானதாகும். மாணவர்களை பலிக் கடாக்களாக்காதீர்கள். ஆகவே, இப் பல்கலைக்கழகத்தின் துரித அபிவிருத்திக்கு யாவரையும் நேசக்கரம் நீட்டுமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# திறந்த பொருளாதாரக் கொள்கையும் ஜனநாயகப் போராட்டத்தின் சவால்களும் 1

செப். மாதம் முப்பதாம் திகதி நுகேகொடவில் நடைபெற்ற ''யுத்தம் வேண்டாம்'' எனும் கோஷத்திலமைந்த பகிரங்கக் கூட்டத்திற்கு சென்றிருந்தேன். அங்கு பேசிய பேச்சாளர்கள் அனைவரும் இலங்கைத் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு வேண்டும் என்பதை வலியுறுத்தினர். அந்தக் கூட்டத்தின் தொடர்நாதமாக ஒலித்தது ஜனநாயக அரசியலின் மீட்சியே. அங்கு சில பழைய நண்பர்களையும் சந்தித்தேன். இடது சாரி அரசியல் கண்ணோட்டமும் இலட்சிய வேட்கையும் மிக்க சில சிங்கள இளைஞர்களுடன் உரையாடும் சந்தர்ப்பமும் கிடைத்தது. அந்த மாலையின் அனுபவங்கள் எல்லாமே இன்று நமது நாட்டில் எழுந்துவரும் புதிய ஜனநாயக அலையை ஊர்ஜிதம் செய்பவை போலிருந்தன.

அத்கு முன்னர்தான் கிழக்கிலங்கையில் ஒரு வாரத்தைக் கழித்து விட்டு வந்தேன். கிழக்கு பல்கலைக் கழகத்திலும் வெளியேயும் பல பழைய, புதிய நண்பர்களுடன் பயனுள்ள சம்பாஷனைகளைச் செய்யும் வாய்ப்புக்கள் கிடைத்தன. அங்கே தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகள் பிறந்திருப்பதைத் தெளிவாகக் காணமுடிந்தது. நான் தற்போது விரிவுரையாற்றிக் கொண்டிருக்கும் பேராதனை வளாகத்திலும் ஆசிரியர்களும் என்னுடன் தொடர்புள்ள உயர் பட்டப்படிப்பு மாணவர்களும் இன்ற இலங்கையின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் எழுதப்பட்டுக் கொண்டிருப்பதாகக் கருதுகின்றனர். நான் இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் போது யாழ்ப்பாணம் சென்ற சமாதானத் தூதுக்குழுவிற்கு அங்கே கிடைத்த மகத்தான வரவேற்பு பற்றியும், யாழ் மக்களின் சமாதான வேட்கை பற்றியும், முதலாவது கட்ட பேச்சுவார்த்தையின் வெற்றி பற்றியும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

பல வருடங்களுக்குப்பின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும் சுதந்திரத்தைப் பயமின்றி அனுபவிக்கின்றனர். சில பத்திரிகைகள் முன்பைவிடச் சுதந்திரமாகத் தலையங்கங்களைத் தீட்டுகின்றன. செய்திகளைத் தருகின்றன. இன ஐக்கியத்தை வலியுறுத்தும் விடயங்களைச் சில பத்திரிகைகள் தொடர்ச்சியாகத் தந்து கொண்டிருக்கின்றன.

எங்குமே ஜனநாயகம் என்பதே பேச்சு. பல்வேறு மட்டங்களிலும் ஒரு புதிய நம்பிக்கை. நமது அரசியல் வரலாறு ஒரு திருப்புமுனையைத் தாண்டுகிறது போலும். பலர் மத்தியில் இந்த உணர்வு வேரூன்றியுள்ளது என்றே படுகிறது. ஒருபுதிய அரசியல் கலாசாரம் மிளிரும் அறிகுறிகள் நம்பிக்கை தரும் வகையில் ஒளிர்கின்றன.

இல்ங்கை அர்சியல் வானில் இந்த நம்பிக்கை நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருக்கும் அதேவேளை பொது மக்கள் முன்னணி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை பற்றி ஒரு முக்கிய கேள்வியைத் தூக்கிப் போட்டார் ஒரு நண்பர். ஐ.தே.கவின் பொருளாதாரக் கொள்கைக்கும் பொதுமக்கள் முன்னணியின் பொருளாதாரக் கொள்கைக்குமிடையே என்ன வேறுபாடு?

பல வருடங்களாக எதிர்க்கட்சியினர் ஐ.தே.கவின் ''திறந்த பொருளாதாரக் கொள்கையை நிராகரித்து வந்தனர். அதற்கெதிராக ஆழமற்ற விமர்சனங்களையும் அங்கும் இங்கும் மேடைகளில் முன்வைத்தனர். 17வருடங்களாக திறந்த பொருளாதாரக் கொள்கை பற்றி அதன் நல்ல - தீய விளைவுகள் பற்றிய எதுவித விவாதங்களையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்லக்கூடிய நிலையில் பிரதான எதிர்க்கட்சிகள் இருக்கவில்லை. தொடர்ச்சியான அரசியல் தோல்விகளும் ஐ.தே.கவின் அரச பயங்கரவாதமும் எதிர்க்கட்சிகளை நிலை கலங்க வைத்ததும் இதற்கு ஒரு காரணமாகியிருக்கலாம். இந்த நிலை தொடர்கையில் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன் அமைக்கப்பட்ட பொது மக்கள் முன்னணியின் தலைவர்கள் ''திறந்த பொருளாதாரக் கொள்கை'' இன்றைய நிலையில் தவிர்க்க முடியாதது என்ற நிலைப்பாட்

**சமுத்திரன்**

டிற்கு வந்தனர். பொது மக்கள் முன்னணி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையின் முதலாவது பிரகடனம் சில நாட்களுக்கு முன்னரே வெளிவந்துள்ளது. இதன் சாராம்சம் ''மனிதமுகம் கொண்ட ஒரு திறந்த பொருளாதாரம்'' எனச் சந்திரிகா முன்னர் கூறிய வார்த்தைகளை ஒரு நண்பர் கூறினார். அப்படியாயின் ஐ.தே.கவின் ''திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு'' இருந்த அரக்க முகத்தை அகற்றி அதற்கு பதிலாக ஒரு மனித முகத்தை ஒட்டுவதுதான் இன்றைய தேவையா? உண்மையில் பொது மக்கள் முன்னணி எதிர்நோக்கும் சவால்களுக்கு அத்தகைய ஒரு யாந்திரீகரீதியான முகமாற்றத்தால் பதிலளிக்க முடியாது என்பதே என் கருத்து. அதேநேரம் பொது மக்கள் முன்னணியின் பொருளாதாரக் கொள்கையின் முழுமையான விருத்தி இன்னும் பூரணமாகவில்லை என்பதையும் நாம் கவனத்திலெடுக்க வேண்டும். பொது மக்கள் முன்னணியின் பொருளாதாரக் கொள்கைப் பிரகடனத்தைப் பார்க்கும் போது அதன் நிலைப்பாடு அடிப்படையில் -(அதாவது பொருளாதாரம் பற்றி) முன்னைய அரசாங்கத்தின் கொள்கைக்கு மாறானதல்ல. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை முன்னைய அரசாங்கத்திற்கும் இன்றைய அரசாங்கத்திற்கும் ஒரு பொதுவான பிரச்சினை உண்டு. இலங்கையில் ஒரு முதலாளித்துவப் பொருளாதார அபிவிருத்தியை எப்படி ஏற்படுத்துவது? அதற்கான வழிவகைகளை இன்றைய உலக பொருளாதார அமைப்பின் த்ன்மைகளுக்கமைய அதுதரும் வளர்ச்சிச் சந்தர்ப்பங்களை இனங்கண்டு எப்படி நடைமுறைத் திட்டமயமாக்குவது?



ஆனால் பொருளாதாரத்துறையின் சவாலை மட்டுமே பார்க்கும் போது இருக்கும் இந்த ஒருமைப்பாடு பொது மக்கள் முன்னணியின் அரசியல் வெற்றிக்கான பின்னணிகளையும் அது முன்வைத்து வரும் ஜனநாயக, சமூக நல வாக்குறுதிகளையும் கணக்கிலெடுக்கும் போது மக்கள் மத்தியில் மனக் குழப்பங்களுக்கும் புதிய கேள்விகளுக்கும் வழிவகுக்கலாம்.

அன்றைய ஐ.தே.கவுக்கும் இன்றைய பொது மக்கள் முன்னணிக்குமிடையிலான வேறுபாடுகள் அரசியல் சமூகப் பிரச்சினைகள் பற்றிய நிலைப்பாடுகளில் சுலபமாகத் தெரிகின்றன. ஆனால் பொது மக்கள் முன்னணியின் பொருளாதாரக் கொள்கை பற்றிய விளக்கங்கள் இன்னமும் நன்கு தெளிவாக்கப்படாமலே இருக்கின்றன. அதே வேளை இன்று மக்கள் மத்தியில் வீசும் ஜனநாயகக் காற்றுள் அவர்கள் வெளிப்படுத்தும் நம்பிக்கைகளும் கோரிக்கைகளும் புதிய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையுடன் நேரடித் தொடர்புள்ளவை. இவற்றை தற்காலிகமாக வேனும் தள்ளி வைத்து விட்டு பொருளாதாரக் கொள்கையை வகுக்க முற்படல் பல புதிய முரண்பாடுகளையும் அவற்றின் விளைவாகப் பல சிக்கல்களுக்கும் வழிவகுக்கலாம். பொது மக்கள் முன்னணி இன்று எதிர்நோக்கும் அபிவிருத்திக் கொள்கைச் சவாலுக்கு மூன்று முக்கிய பரிமாணங்கள் உண்டு. இவை மூன்றையும் இணைத்துப் பார்த்தல் அவசியம். அவையாவன -

(1) பொருளாதார வளர்ச்சி
(2)ஜனநாயகமயமாக்கல்
(3) சமூக நலன்விருத்தி



ஐ.தே.கவிடமிருந்து பெருமளவில் வேறுபடாத பொருளாதாரக் கொள்கையைக் கொண்டிருந்த பொது மக்கள் முன்னணியை மக்கள் ஐ.தே.க ஆட்சிக்கு எதிராக தேர்ந்தெடுத்ததற்கான காரணங்கள் பின்னைய இரண்டுமே. இவையே தேர்தலின் போது பொது மக்கள் முன்னணியை ஐ.தே.கவிடமிருந்து வேறுபடுத்திக் காட்டின. மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வகையில் இம்மூன்று பரிமாணங்களையும் பொது மக்கள் முன்னணியினால் ஒன்றிணைக்க முடியும் என்ற நம்பிக்கை மக்களிடம் வேரூன்றியுள்ளது.

இதனால் இன்றைய கட்டத்தில் ஐ.தே.கவுடன் பொது நிலையாகப் புதிய அரசாங்கம் கொண்டுள்ள திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு அடிப்படையாக அமைந்துள்ள பொருளாதாரத் தாராளவாதத்திற்கும் (Economic Liberalisum) மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் அரசியல் ஜனநாயகக் கோரிக்கைகள் சார்ந்திருக்கும் அரசியல் தாராளவாதத்திற்கும் (Political Liberalisum) அத்துடன் இணைந்துள்ள சமூக நலக் கோரிக்கைகளுக்குமிடையிலான முரண்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை மூலதனத்தின் இயக்கத் தேவைகளுக்கும் தொழிலாளர்களின் சமூக நலன்களுக்குமிடையிலான முரண்பாடாக, அரசுக்கும்-மூலதனத்திற்குமிடையிலான முரண்பாடாக, அரசு - மக்கள் முரண்பாடாக பல வடிவங்களில் தலைவிரித்தாடவல்லன. இவற்றைப் பார்ப்பதற்கு முன்னர் ''திறந்த பொருளாதாரம்'' எனும் கோட்பாடு பற்றிச் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

''திறந்த பொருளாதாரக் கொள்கை'' எனும் பதம் கட்டுப்பாடற்ற சந்தை சக்திகளை ஊக்குவித்து அவற்றிற்கூடாக உலகப் பொருளாதார அரங்கில் போட்டி போட்டு தேசிய பொருளாதார வளர்ச்சியை முன்னெடுக்கும் வழிமுறைகளைக் குறிக்கிறது. 1960களில் பிறந்து எழுபதுகளில் பரவலான எழுச்சியைப் பெற்ற புதிய பொருளாதார தாராளவாதத்தின் பலமான அபிவிருத்திக் கருத்தமைவின் முக்கிய அலகாக சுயபோட்டிச் சந்தை விளங்குகிறது. ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன் நவீன பொருளியலின் பிதாவெனக் கருதப்படும் அடம் ஸ்மித் (Adam Smith) வகுத்த லிபரல் பொருளாதாரக் கோட்பாடே இன்றைய ''திறந்த பொருளாதார'' கொள்கையின் தத்துவார்த்த அடிப்படையாக அமைகிறது. ஸ்மித்தின் லிபரல் பொருளாதார மாதிரியின் முக்கிய பண்புகளை மூன்றாகச் சுருக்கிக் கூறலாம்

-சுயநலன்களினால் உந்தப்படும் சுதந்திரமான தனிநபர்கள்
-சுய நெறிப்பாட்டில் இயங்கும் சந்தைகள்
-பொருளாதாரத்தில் ஆகக்குறைந்த பட்ச தலையீட்டை மட்டுமே செலுத்தும் அரசு. இந்த தேசிய அரசின் பணிகளை ஸ்மித் மூன்றாக வகுத்தார்.

அ) தேசிய பாதுகாப்பு
ஆ) நீதிபரிபாலனம் - இந்தப் பணி தனிநபர்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக உதாரணமாக தனிநபர் சொத்துக்களை வாங்கவும் விற்கவும் இருக்கும் உரிமையைப் பேணல்.
இ) சமூகத்திற்கு அத்தியாவசியமான அதேநேரம் தனியார் துறையின் முதலீட்டிற்கு ஒவ்வாத (அதாவது லாபம் தராத) பொது நிறுவனங்களையும் சேவைகளையும் நிர்மாணித்தல், பராமரித்தல்.

ஸ்மித்தின் மாதிரியில்,
சுயபோட்டிச் சந்தை பொருளாதாரப் பரிவர்த்தனையின் ஊடகமாகும் போது தனிமனிதர்கள் சுதந்திரமாக சமத்துவமாகச் சந்தையில் சந்திக்கிறார்கள். இங்கே பழைய சமூகங்களின் உறவுகளுக்கும் மரபுரீதியான பெறுமதிக் குறியீடுகளுக்கும் பதிலாக கட்டற்ற போட்டிக் கூடா

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**நவ சம சமாஜக் கட்சியின் உத்தியோகபூர்வ சிங்கள ஏடான "ஹறய" (இலக்கு) செய்திப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவின் உறுப்பினரொருவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முதல் கட்டப் பேச்சு வார்த்தை தொடர்பான தகவல்கள் சேர்க்க சென்றிருந்தார். சமாதானப் பேச்சு வார்த்தை முடிவின் பின்பு அவர் ஆறு நாட்கள் யாழ்ப்பாணக் குடாநாடு, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் அதை அண்டிய பல பிரதேசங்களுக்கு மேற்கொண்ட பிரயாணத்தின் பின்பு "ஹறய" பத்திரிகைக்கு எழுதிய நீண்ட கட்டுரையின் சுருக்கம் தான் இங்கு பிரசுரிக்கப்படுகிறது. கொழும்புப் பத்திரிகைகள் இவ்விடயம் தொடர்பாக அநேக கட்டுரைகளை வெளியிட்டுள்ள போதும், இக்கட்டுரையின் சிறப்புக் கருதியே இதை இங்கு தருகிறோம்.**

பருத்தித்துறையிலிருந்து வவுனியா, தாண்டிக்குளம் வரை நீண்டதும், மன்னாரிலிருந்து முல்லைத்தீவு வரையிலும் அகன்றதுமான வடபகுதியில் நிலப்பிரதேசம் த.வி.புலிகளினால் நிர்வகிக்கப்படும் 'தமிழ் ஈழ இராச்சியத்துக்கு' முற்பட்ட நிச்சயமான நிலப்பகுதியாக உள்ளது. அதற்குப் புறம்பாக த.வி.புலிகளின் அதிகாரம் கிழக்கு மாகாணத்திலும் பரந்துள்ளது என்ற போதும் அதன் உறுதியான அதிகாரம் நிலவுவது யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், கிளாலி கடல் ஏரியின் கீழ் உள்ள தாண்டிக்குளம் வரையான பகுதியிலுமே என்பதை எமது பிரயாணத்தின்போது நாம் கண்டு கொண்டோம்.

எட்டு நாட்களாக நாம் மேற்கொண்ட எமது தகவல் சேகரிக்கும் சுற்றுப்பயணத்தின் போது ஓரிடத்தில் சுவர் ஒன்றில் காணப்பட்ட சுலோகம் ஒன்று என்னைக் கவர்ந்தது. 'தமிழீழ இராச்சியத்தின்' மன வேட்கை என்று எனக்குத் தோன்றிய அச்சுலோகத்தின் சிங்கள வடிவம் இது. புலிகளின் வேட்கை தமிழீழத்தின் பிறப்பே. இச்சுலோகத்தில் வெளிப்படுவது த.வி.புலிகளின் மன வேட்கையே என நான் கூறுவதற்கு காரணம் உண்டு. வடபகுதியில் தற்போதுள்ள ஒரேயொரு பலமிக்க ஸ்தாபனம் தமிழீழ விடுதலைப் புலிகளே ஆகும். அவ்வியக்கத்தின் மனவேட்கை இதுவரை கட்டியெழுப்பப்பட்டுள்ளதும் தற்போது கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருப்பதும் எதிர்காலத்தில் கட்டியெழுப்பப்படப் போவதும் தமிழ் மக்களின் இன்பதுன்பங்கள், வேதனைகள் என்பவற்றிலிருந்தே யாகும். இவ்வாறான இன்பதுன்பங்களை, வேதனைகளை நாம் எம்முடைய பிரயாண காலத்தில் வடபகுதியில் போதியளவுக்கு கண்டு கொண்டோம். தென்பகுதியில் பலரின் கருத்துப்படி த.வி.புலிகள் இயக்கம் வெறுமனே ஒரு பாசிச இயக்கம் மட்டுமே. இங்குள்ள முற்போக்குவாதிகள் எனத் தம்மைக் கூறிக் கொள்வோர் பலர் பாசிசம் என்ற பதத்தால் அர்த்தப்படுத்துவது எல்லாம் படுகொலை அரசியலை மட்டுமே. ஆனால் அரசியல் விஞ்ஞானமோ படுகொலை அரசியல் என்பதனை பாசிச வழிமுறையின் ஒருபகுதியாக மட்டுமே இனங்காண்கிறது. அதையே பாசிசத்தின் முழுமையாக அது ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை. பாசிசத்தின் ஒருகூறான படுகொலை அரசியலை மட்டும் வைத்துக் கொண்டு புலிகளை பாசிச அரசியல் இயக்கமாக முடிவு செய்வது தவறானதாகும். நான் மேலே குறிப்பிட்ட சுலோகத்தை த.வி.புலிகளின் மனவேட்கையாக இனங் கண்டு கொள்வது இவ்வாறு பார்ப்பவர்களுக்கு சாத்தியமில்லை.

## பத்திரிகையாளரின் அனுபவங்கள்

இவ்வாறான சுலோகம் ஒன்றை வாசிக்கும் ஒருவர் தன்னைத் தானே கேள்வி கேட்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார். இதற்கு பின்வரும் சம்பவம் ஒரு நல்ல உதாரணமாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்றில் பணிபுரியும் பத்திரிகையாளர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்த போது நான் இவ்வாறு கேட்டேன்:

"தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத்தில் நீங்கள் ஏன் சேர்ந்து கொள்ளவில்லை?"

எந்தவித தயக்கமுமின்றி அவர் இவ்வாறு பதிலளித்தார்:

"நான் பிறந்து வளர்ந்து படித்தது எல்லாமே கொழும்பில். 83 கலவரத்தின் பின்புதான் நாங்கள் யாழ்ப்பாணமே வந்தோம். மிக அண்மைக்காலம் வரையிலும் எனக்கு த.வி.புகளின் மீது ஈடுபாடு இருக்கவில்லை. ஆனாலும் இலங்கை அரசாங்கம் விமானத் தாக்குதல் நடத்துகின்ற ஒவ்வொரு தடவையும் வானிலிருந்து கழிவுப் பொருட்களை மற்றும் கிருமிகள் உள்ளடங்கிய பீப்பாக்களை வீசுகின்ற ஒவ்வொரு கணமும் என்னுடைய மனச்சாட்சி என்னை நோக்கி கேள்வி எழுப்புகின்றது. 'நீ ஏன் இன்னும் பார்த்துக் கொண்டிருக்கிறாய்' என்னுடைய மனச்சாட்சி இவ்வாறான வேளைகளிலெல்லாம். என்னை உறுத்தியது. நான் தற்போது த.வி.புகளில் இராணுவத்தில் சேராவிட்டாலும் கூட அவர்களை முழுமனசோடு விரும்புகிறேன். இதுபற்றி இன்னும் சொல்வதானால், இலங்கை அரசாங்கம் நாம் தமிழர்கள் என்ற ஒரே யொரு காரணத்துக்காகவே எம்மையெல்லாம் பயங்கர ஒடுக்குமுறைக்குள்ளாக்குகிறது. அவற்றிலிருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்வதற்கு தடை ஒன்றைப் போட்டுக் கொள்ள வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். இத்தடையை பலமாக போடுவதற்கு இங்குள்ள மக்களுக்கு உதவியாக இருந்தது த.வி.புலிகள் மட்டுமே."

இப்பத்திரிகையாளர் மனம் திறந்து எம்முடன் கூறிய இந்த வார்த்தைகள் வெறுமனே ஒரு பத்திரிகையாளரின் வார்த்தைகள் மட்டுமல்ல வடக்கில் நாம் சந்தித்த பெரும்பாலான மக்களது மன உணர்வையும் இது காட்டுவதாக இருந்தது.

ஆனால் கொழும்பிலிருந்து எம்முடன் சென்ற பத்திரிகையாளர் பலர் புலிகள் பாசிஸ்டுகள் என்ற சட்டகத்தை மனதில் வைத்துக் கொண்டே அங்கு சென்றனர். அவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த இரண்டு நாட்களில் அங்கு கண்டவை கேட்டவைகளையும் கூட கொழும்புக்கு வந்ததும் மேற்கூறிய சட்டகத்தினூடான அவர்களது பார்வை காரணமாக தீவிரமான புலி எதிர்ப்பு நிலை நின்றே எழுதுகின்றனர். த.வி.புலிகளை ஒரு முற்போக்கான விடுதலை இயக்கமாக யாராலும் கூறிவிட முடியாது என்பது உண்மையே என்ற போதும் அவ்வியக்கத்தினுள் உள்ளடங்கியுள்ள தமிழ் மக்களின் துன்ப துயரங்களை அங்குள்ள யதார்த்த நிலைமைகளை இவ்வாறான ஒரு கண்ணோட்டத்துடன் பார்ப்பவர்களால் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது.

## புலிகளின் குரல்: சமாதானத்திற்கான வழி


யாழ் நகரில் வெள்ளை நீல நிறக் கொடிகள் பறப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் எழுதுகின்றன. ஆனால் அங்கு தங்கியிருந்த எட்டு நாட்களில் நாம் அவ்வாறன கொடிகள் எதையும் காணவில்லை. கொழும்புப் பொதுசனத் தொடர்பு சாதனங்கள் எவ்வளவு தூரம் பக்கச் சார்பானவை என்பதற்கு இச்சிறு உதாரணமே போதுமானது. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பவற்றைப் பார்க்கும் போது இவற்றை நன்கு விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

வடபகுதியிலுள்ள சாதாரண மக்களுக்கு இன்னும் கொழும்பிலிருந்து வரும் தொடர்புச் சாதனங்களுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்புக்கள் அனேகமாக தடுக்கப்பட்டே உள்ளன. உண்மையிலேயே வடபகுதி மக்களின் பிரதான பொதுசன தொடர்பு சாதனம் 'புலிகளின் குரல்' எனும் வானொலி சேவையேயாகும். அதைவிட ஈழநாதம், உதயன், ஈழநாடு ஆகிய பத்திரிகைகள் அங்கு உள்ளன. அவை கூட அனேகமாக த.வி.புலிகளுக்கு பிரச்சாரம் செய்யும் சாதனங்களாகவே உள்ளன.

புலிகளின் குரல் வானொலியும் ஒருபக்கச் சார்பான கருத்துக்களையே தருகிறது. சரியாகச் சொல்வதானால் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நேரடிக் கண்காணிப்பின் இயங்கும் அவர்களது சொந்த பிரச்சாரச் சாதனமாகவே அது இயங்குகிறது. அதனால் தானோ என்னவோ இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையோடு ஒப்பிடும் போது, 'புலிகளின் குரல்' சேவை மிகவும் செய் நேர்த்தியுடன் செயற்படுகிறது. (இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவையில் கடமையாற்றுபவர்கள் வெறும் சம்பளத்திற்கு வேலை செய்பவர்களே)



நாம் அங்கிருந்த காலப்பகுதியில் புலிகளின் குரல் வானொலியின் பிரதான கவனம் சமாதானத்தின் மீதே திரும்பியிருந்தது. பெரும்பாலும் யுத்தத்திற்கு மக்களைத் தயார் செய்யும் வகையிலான யுத்தவாதக் கருத்துக்களையே கொண்டிருக்கும் இச்சேவை இப்போது சமாதானத்தை நோக்கித் திரும்பியுள்ளது. இதற்கு உதாரணமாக அச்சேவையில் ஒலிபரப்பப்பட்ட ஒரு விடயத்தைக் குறிப்பிட முடியும். வெளிநாடுகளில் நடைபெற்றுவரும் பல்வேறு சமாதான முயற்சிகளை பற்றிய கட்டுரைகளை அது ஒலிபரப்பியது. பாலஸ்தீன - இஸ்ரேலிய சமாதான முயற்சிகள், இங்கிலாந்து - ஐ.ஆர்.ஏ., பர்மாவின் அவுன் சான் சுகி, தென்னாபிரிக்கா நெல்சன் மண்டேலா என்பவை நான் இருந்த காலத்தில் கேட்கக் கிடைத்த சில கட்டுரைகள் ஆகும்.



இவ்வாறான பின்னணி தோன்றுவதற்கு இன்னுமொரு பிரதான காரணமும் உண்டு. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இப்போது அதிகம் பேசப்படுவது அதன் அரசியல் பிரிவு பற்றியதாகும். உண்மையிலேயே கூறுவதானால் இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள 'திலீபன் தளம்' மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாகும். 'திலீபன் தளம்' எனப்படுவது த.வி.புலிகளின் தலைமைக் காரியாலயம். இத்தளத்திற்கு இன்றைய சமாதானப் பேச்சின் காரணமாக ஒரு முக்கியத்துவம் கிடைத்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்போதைய சகல கருத்து வெளிப்பாடுகளும் தமது சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முடிவை தமிழ் மக்களுக்கு விளக்குவதாகவே அமைந்துள்ளன. புலிகள் எவ்வளவு தூரம் முயன்று இதை விளக்க முயன்ற போதும் நான் சந்தித்த மக்களை வைத்துக் கூறுவதானால் அங்குள்ளவர்கள் பேச்சுவார்த்தை வெற்றிபெறும் என்பதில் பெருமளவு நம்பிக்கையற்றவர்களாகவே உள்ளனர். பலர் இப்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை கடைசி பஸ் (Last Bus) என்று கூறினர். என்னுடன் பேசிக் கொண்டிருக்கும் போது ஒருவர் சந்திரிகாவின் அரசாங்கம் ஒரு முற்போக்கான அரசாங்கம் என்று குறிப்பிட்டார். த.வி.புலிகளின் அனுதாபியான இவரிடம் நான் இவ்வாறு கேட்டேன்:

"அப்படியானால் நீங்கள் ஏன் இன்னமும் புலிகளுக்கு ஆதரவாக இருக்கிறீர்கள்"

அவர் சொன்னார்: "சந்திரிகா பற்றி எனக்கு நம்பிக்கையுள்ளது. அது உண்மைதான். ஆனால் சந்திரிகாவின் அரசாங்கம் பற்றி அவ்வளவு நம்பிக்கை வைக்க முடியவில்லை. ஏனென்றால் இந்த அரசாங்கத்தின் உள்ளும் இனவாதிகள் இருக்கவே செய்கின்றனர். அதுமட்டுமல்ல அவர்கள் மிகவும் பலமான நிலையிலும் இருக்கின்றனர். மறுபக்கத்தில் புலிகள் இயக்கத்தினர் எம்மீது எவ்வளவு ஒடுக்குமுறைகளைக் கையாண்ட போதும் தமிழ் மக்களுக்கான ஒரே பாதுகாப்பாளராகவும் இருக்கின்றனர்.

இவ்வாறான கருத்துக்களைக் கூறும்போது அவர்கள் ஒன்றில் தனியான சந்திப்பின் போது மட்டுமே இவற்றைக் குறிப்பிட்டனர். அல்லது இருபுறமும் பார்த்த பின்னே இவ்வாறு குறிப்பிட்டனர். பெரும்பாலும் இவ்வாறு தெரிவித்தவர்கள் நடுத்தர வர்க்கத்தைச் சாராத சாதாரண மக்களே. பொதுவான த.வி.புலிகளின் மீது மக்கள் அனுதாபம் இருந்த போதும், யாழ்ப்பாணத்தில் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த அல்லது உயர் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்களது அபிப்பிராயங்கள் புலிகளுக்கு விரோதமானவையாகவே உள்ளன. இம் மத்திய தர வர்க்கத்தினைச் சார்ந்தவர்கள் நாம் சந்தித்த இடங்களிலெல்லாம் புலிகள் மீது குற்றம் சுமத்தினர். அவர்களின் பேச்சுக்களில் பெருமளவு இடம் பெற்றவை புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் மற்றும் வரி வசூலிப்பு போன்றவையாகும். அவர்களின் குற்றச்சாட்டுக்களில் உண்மை இல்லாமல் இல்லை. அத்தோடு இம் மத்திய தர வர்க்கத்தினர் தமது அறிவுக்கும் அரசியல் ஆதிக்கத்திற்கும் அச்சுறுத்தல் புலிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்ற பொறாமை காரணமாகவும் புலிகள் மீது குற்றம் சாட்டினர்.

நாம் சந்தித்தவர்களில் முன்னைநாள் தமிழர் விடுதலைக் கூட்ட



# வடக்கு கிழக்கு

# ஒரு நீ

ணிப் பிரமுக... மாறு குறிப்பி...

"இவங்கள் பு... கள் தான் இவ... னோம். என்... இன்று எமது... கொல்லப்பட்ட... களும் இவர்க... துதான் வாழ... 13, 14 வயது... பிள்ளைகளும்... கேட்டு நாம்... கிறது".

அதேசமயம்... வாறு தெரிவித்... "புலிகளைத்... செய்வது இ... திற்கு ஒன்றும்... அவர்கள் நினை... கள் ஒன்றும்... இல்லை."

இலங்கை க... (மொஸ்கோ)...

www.tamilarangam.net





# சமாதானம்:

# ...ண்ட கனவு!

ஒருவர் பின்வரு
ார்:
கொலைகார். நாங்
ளுக்கு வழிகாட்டி
உண்மைதான்.
தலைவர்கள் கூட
விட்டார்கள் நாங்
க்கு பயந்து பயந்
வண்டியிருக்கிறது.
பயன்களும் பெண்
சொல்வதைக்
க்க வேண்டியிருக்
ன்னொருவர் இவ்
ார்.
தோல்வியடையச்
க்கை அரசாங்கத்
டினமானது அல்ல.
ப்பது போல இவர்
ரியளவு பலமாக
ூனிஸ் கட்சியின்
ன்னாள் கிளிநொச்

சிப் பிரமுகர் ஒருவர் இவ்வாறு கூறினார்:

''விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக சில காலம் நான் செயற்பட்டேன். அதன் விளைவுகளை இப்போது நான் அனுபவிக்கிறேன். நான் அவர்களிடம் எதிர்பார்த்தது எல்லாம் முழுமையான தமிழ் மக்களது உரிமைகளை விடுதலைப் புலிகள் பெற்றுத் தருவார்கள் என்பதை. ஆனால் அது அப்படி நடக்கவில்லை. அதுமட்டுமல்ல தனிப்பட்ட முறையில் என்னுடைய நல்ல வீடொன்றையும் அவர்கள் தமது காரியாலயமாக பாவிப்பதற்காக எடுத்து விட்டார்கள்''

அவருடன் பேசிவிட்டு வரும் போது எம்முடன் வந்த ஒருவரிடம் நான் இவ்வாறு குறிப்பிட்டேன்: ''இவர் ஒரு கம்யூனிஸ் கட்சி உறுப்பினராக இருக்கலாம். ஆனால் ஒரு கம்யூனிஸ்டாக இவரால் இருக்கமுடியவில்லை''.

## ஷெல் தாக்குதல்கள்

15ம் திகதி இரவு பெரிய சத்தம் ஒன்றுடன் ஷெல்லடிக்கப்படுவதை நாம் கேட்டோம். இத்தாக்குதல்கள் காரைநகர் இராணுவ முகாமிலிருந்து நடத்தப்படுவதாக அங்கிருந்தவர்கள் கூறினர். எனக்குத் தெரிய 24 ஷெல்கள் விழுந்து வெடித்த சத்தத்தை நான் கேட்டேன். மறுநாள் காலை துக்ககரமான செய்தி ஒன்றை எதிர்பார்த்தபடி நான் கண் விழித்தேன். ஆனால் அடிக்கப்பட்ட ஷெல்கள் எவையும் நிலப்பகுதியில் விழவில்லை என்றும் எல்லாமே கடலுக்குள் தான் விழுந்தன என்றும் எம்முடன் இருந்த சாரதி குறிப்பிட்டார். ஷெல் தாக்குதல்கள் அனைத்தும் கடலுக்குள் போய் விழுந்தபடியால் அப்பிரதேசத்திலிருந்த மக்களுக்கு இன்னும் சில தினங்கள் வாழும் அதிர்ஷ்டம் கிடைத்தது.

## வடக்கிற்கான கௌரவமான சமாதானம்

யாழ்ப்பாண மாநகரசபையின் 25வது ஆண்டு நிறைவுவிழாவை யொட்டி வெளியிடப்பட்ட நினைவு மலரில் இன்றைய சபாநாயகர் கே.பி.இரட்னாயக்கா கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் அவர் யாழ்ப்பாணக் குடாநாடு மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு விஷேசமான இடம் என்றும் அது தன் இதயத்தில் அழியாத நினைவுகளை ப்தித்துள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார். கிட்டத்தட்ட இதே அபிப்பிராயத்தைக் கொண்ட வெளிநாட்டார் ஒருவரை எமது பயணத்தில் நாம் சந்தித்தோம். 'இன்ர நஷனல் ரைம்ஸ்' (International Times) சஞ்சிகையின் தென்னாசிய நிருபரான திரு ஜெவ் (Jeff) என்பவரே அவர். இவர் புது டில்லியல் தங்கியிருந்து பணிபுரிந்து வருகிறார். அழகான பலாலிக் கடலில் சூரியன் அஸ்தமிக்கும் மாலைப் பொழுதில் நாம் குளித்துக் கொண்டிருக்கும் போது அவரிடம் கேட்டேன். 'ஜெவ், நீங்கள் ஏன் யாழ்ப்பாணத்திற்கு வரவிரும்பினீர்கள்'?

அவர் 'நான் யாழ்ப்பாணத்தைப் பார்க்க வந்தேன்' என்று சுருக்கமாக குறிப்பிட்டார். அப்போது நான் நினைத்தேன் 'இவர் ஆழமான அரசியல் ஈடுபாடு ஏதுமற்ற சாதாரண உல்லாசப் பிரயாணி மட்டுமே' என்று.

ஆனாலும் யாழ்ப்பாணத்தை விட்டு கொழும்பு வரும் தினத்தன்று மீண்டுமொருமுறை நான் அவரைச் சந்தித்தேன். எனது நினைவின்படி அது 16ம் திகதி. அவரிடம் அதேகேள்வியை, ஏன் யாழ்ப்பாணத்திற்கு வர விரும்பினீர்கள்? என்ற அதே கேள்வியை திரும்பவும் கேட்டேன்.

ஒரு புன்னகையுடன் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். 'நீங்கள் இரண்டாந்தடவையும் அதே கேள்வியைக் கேட்கிறீர்கள். சரி. நான் அதற்கு பதில் தருகிறேன். இது பதில் என்பதைவிட யாழ்ப்பாணம் பற்றிய எனது அபிப்பாரயம் என்று நீங்கள் எடுத்துக் கொள்வதே பொருத்தமானதாக இருக்கும். யுத்த நிலைமைகளுக்கு மத்தியில் வாழும் அப்பாவி மக்களைப் பராமரிக்கும் ஒரு அமைப்பு அது எவ்வ




ளவு தவறுகளைக் கொண்ட அமைப்பாக இருந்த போதிலும் அதன்மீது அம்மக்களுக்கு மனப்பூர்வமான விருப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாததே. அது இயல்பானதும் கூட. யாழ்ப்பாணத்திலும் இன்றுள்ள நிலைமை அவ்வாறன தொன்றே. சந்திரிகா அரசாங்கம் இங்கு ஒரு சமாதான நிலைமையை உருவாக்க விரும்பினால் புலிகளுடன் ஒரு கௌரவமான சமாதான உடன்பாட்டிற்கு வந்தாக வேண்டும்.''

கௌரவமான சமாதானம் என்பது பலமான அரசியல் தீர்வே. எனக்குத் தெரிந்தளவில் விடுதலைப்புலிகளிடமும் இதற்கான எதிர்பார்ப்பு நிறையவே உள்ளது. ஒருநாள் விடுதலைப் புலிகளின் உயர்மட்ட இராணுவத் தலைவர் ஒருவடன் நான் பேசிக் கொண்டிருந்த போது அவரிடம் 'உங்களது இயக்கம் எவ்வாறான சமஷ்டி ஆட்சிமுறையைக் கேட்கிறது' என்று கேட்டேன். அதற்கு அவர் 'அரசாங்கம் அரசியல் தீர்வொன்றை தயாரித்துள்ளதாகக் கூறுகிறது. ஆனால் அதுபற்றி இதுவரை எமக்கு எதுவும் தெரியாது. ஆகக்குறைந்தது இந்திய மாநில அரசாங்க முறைக்கு சமனான அதிகாரமாவது கிடைத்தால் மட்டுமே எம்மால் ஏற்றுக் கொள்ள முடியும்.'

இவ்விடத்தில் ஒருவிடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். த.வி.புலிகள் இயக்கத்தில் உள்ள அனைவரும் அரசியல் தீர்வு ஒன்று காணப்படுமானால் அவர்களது எதிர்காலம் எப்படியமையுமோ என்று அஞ்சுகின்றனர். மேலும் கூறுவதானால் இதே பிரச்சினை இலங்கை இராணுவத்திடம் கூட தற்போது காணப்படுகிறது. இவ்விரு பிரிவினரும் கோருபவை பற்றி அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது புலிகளும் சரி, அரசாங்கமும் சரி பேசியேயாக வேண்டும். ஏனென்றால் இது மிகவும் முக்கியமானது ஆகும். நாம் சந்தித்த அனேகமான த.வி.புலிகள் உறுப்பினர்கள் பதினெட்டு வயதிற்குட்பட்டவர்களே. தமது வயதுக்கு மீறிய கடமைகளை அவர்கள் ஆற்றுகின்றனர். அதனாலேயே தமது சுயகட்டுப்பாடுகளை அவர்கள் இழக்கும் நிலைமை ஏற்படும் வாய்ப்புண்டு.

தமது வயதுக்கு மீறிய கடமைகளை ஆற்றுவதன் காரணமாக உருவாகும் அவர்களது ஆளுமையை அவர்களாலேயே தாங்கிக் கொள்ள முடிவதில்லை. இதனால் அவர்கள் இயந்திரமாய் போகிறார்கள். இந்நிலையில் யுத்தம் நிறுத்தப்படுமானால் எந்த சமூகத்திற்காக அவர்கள் தமது கல்வியையும், வாழ்வையும் தியாகம் செய்து போராட்டத்தில் இறங்கினார்களோ அந்த சமூகத்திலேயே இவர்களது இருப்பும் கேள்விக்குள்ளாகி விடக்கூடும். இது யுத்தத்தை நிறுத்துவது என்பதை விட கடினமான யுத்தநிறுத்தத்தின் பின் வரப்போகின்ற பாரிய ஒரு பிரச்சினையாக உருமாறும். த.வி.புலிகளின் கீழ் மட்ட உறுப்பினர்கள் தமது உயிர் தொடர்பான நம்பிக்கையை உறுதிப்படுத்துவதையே கோருகின்றனர். இவ்வாறான பிரச்சினை சிக்கலானதாக ஆக்கப்பட்டிருப்பது தமிழீழ இராச்சியத்தினுள்ள அனேகமான குடும்பங்களின் பிள்ளைகள் த.வி.புலிகள் இயக்கத்தில் இருக்கின்றார்கள் என்பதாலேயே.

சமாதான பேச்சுவார்த்தைகள் இன்னமும் சிவில் நடவடிக்கைகளின் மீதே கவனத்தை குவித்துள்ளதால் எத்தகைய சிக்கல்களும் ஏற்படவில்லை. த.வி.புலிகளின் கரிகாலன், ரவி, டொமினிக், இளம்பருதி ஆகிய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டவர்களைப் போலவே தமிழ்ச் செல்வன், அன்ரன் பாலசிங்கம், நடேசன் போன்றோரும் கூட இன்னும் இனிவரும் காலங்களில் வருகின்ற இப்பிரச்சினைகள் தொடர்பாக நேரடியான பதிலொன்றை அளிக்க விரும்பவில்லை. ஆனால் இப்பிரச்சினை உருவாக்கப் போகின்ற சமூக முரண்பாடுகளுக்கு பதில் என்ன?



## கிளாலியூடாக தாண்டிக்குளம் வரை

கிளாலியூடாக நாம் வந்த பயணம் மிகவும் பயங்கரமானது. சாதாரண பிரயாணிகளின் படகொன்றில்லாமல் கடற் புலிகளின் அதிவிசைப் படகொன்றிலேயே நாம் வந்தோம். படகு எவ்வளவு வேகமாகச் சென்றாலும் கிளாலி ஏரியின் இருபுறமும் உள்ள ஆனையிறவு, பூநகரி முகாங்களிலிருந்து எந்நேரமும் தாக்குதல் நடாத்தப்பட்டாலும் நாம் மரணம் அடைவோம் என்பதில் ஐயமில்லை. எம்முடன் வந்த கடற்புலி படையின் உறுப்பினர் ஒருவர் என்னிம் கேட்டார்: 'தற்போது இலங்கைப் படையின் தாக்குதல் நடந்து இவ்விடத்தில் நீங்கள் கொல்லப்பட்டால் என்ன நடக்கும்?' நான் 'இக்கடலேரியில் நாம் இறந்தால் கிளாலி கடலேரிப் பிரயாணம் எவ்வளவு ஆபத்தானது என்பதை சந்திரிகா அறிந்து கொள்வார். அப்போதாவது பூநகரி சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பதன் அவசியம் பற்றி விளங்கிக் கொள்ளக் கூடும்' என்று பகிடியாக கூறினேன். புலிகள் இப்படிக் கேட்பது போலவே இராணுவத்தினரும் கேள்விகளைக் கேட்பது உண்டு. ஆயினும் இராணுவத்தினரின் கேள்வி பெருமளவுக்கு விரும்பத்தகாதவையாகவே இருக்கும். தாண்டிக் குளம் இராணுவ சோதனை நிலையத்துக்கு வந்த போது ஒரு இராணுவ அதிகாரி என்னிடம் இத்தகைய ஒரு கேள்வியைக் கேட்டார். 'கிட்டு பூங்கா எந்த வீதியில் உள்ளது?' என்பது அவரது கேள்வி. எனக்கு இக்கேள்வி எரிச்சலூட்டியது. அவருக்கு நான் இவ்வாறு பதிலளித்தேன்: 'நாங்கள் உங்களது உளவாளிகள் அல்லவே. நாங்கள் பத்திரிகையாளர்கள். தயவு செய்து எங்களிடம் இடங்களை அடையாளம் காணும் விதத்திலான கேள்விகளைக். கேட்காதீர்கள். அவற்றை நாம் ஒருபோதும் சொல்லமுடியாது. அப்பாவி பொதுமக்களின் பிரச்சினைகள் பற்றி, வாழ்க்கை பற்றி கேளுங்கள். எங்கள் அனுபவங்களை சொல்ல நாங்கள் தயாராக உள்ளோம். இம்மாதிரியான கேள்விகளுக்கு பதில் கூற முடியாது. அல்லது இங்கு வந்து கொண்டிருக்கும் மக்களிடம் பேசி உங்களுக்குத் தேவையான பதிலை முடியுமானால் கேட்டுக் கொள்ளுங்கள்.'

வடக்கு கிழக்கில் யுத்தம் ஆரம்பித்து பத்து வருடங்கள் ஆகிவிட்டது. இந்த இடைக்காலத்தில் ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் அங்கு சென்றுவர பல தடவைகளில் நான் ஆசைப்பட்டது உண்டு. விமான மூலமாகவோ அல்லது கப்பல் மூலமாகவோ அல்ல; தரை மார்க்கமாக. ஆனால் எனக்கு கிடைத்த சந்தர்ப்பமோ விமானம் மூலமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கப்பல் மூலமாகவுமாகும். வடக்கில் பிரயாணம் செய்ய வேண்டி இருந்ததோ தனியாரதும் த.வி.புலிகளுக்குச் சொந்தமான வாகனங்களிலுமாகும். இது மிகவும் துரதிர்ஷ்டவசமானதாகும். ஏனென்றால் பத்திரிகையாளர்களும் சாதாரண மனிதர்களே. சாதாரண மனிதர்களைப் போலவே நானும் பஸ்ஸிலேயோ றெயிலிலோ யாழ்ப்பாணம் போய் வரவே விரும்பினேன். ஆனால் வடக்கிற்குச் சென்ற பின்தான் நீண்டகாலத்திற்கு அது ஒரு கனவாக இருக்கப் போகிறது என்பது எனக்குத் தெரியவருகிறது.

தமிழில் : சி.வினோத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மலையக அரசியல் சமூக கலாசார அமைப்புகள் - 9

**வி.ரி.தர்மலிங்கம்**

இப்போராட்டம் வடக்கு கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் மாத்திரம் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இலங்கையின் மற்றப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கள் மத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. மலையகத்தில் வாழும் இந்திய வம்சாவழி மக்கள் இப்போராட்டத்தை ஆதரித்தனர். இளைஞர்கள் பல வடிவங்களில் தங்களின் உணர்வுகளை வெளிக் காட்டினர். ''இளைஞர் தமிழ்ச்சங்க'' அமைப்பின் சார்பாக, ஒரு துண்டுப் பிரசுரம் இப் போராட்டத்தை ஆதரித்து வெளியிடப்பட்டது. இப்பிரசுரம் மலையக மக்களின் உள்ளக்கிடக்கை வெளிப்படுத்தியது. இளைஞரிடம் உத்வேகத்தை உருவாக்கியது. மலையகத் தமிழ் மக்களும் தமிழின் பால் உணர்வும் பற்றும் கொண்டுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டியது. இப்பிரசுரம் ஆட்சியாளரின் கவனத்திற்கு எட்டியது. மலையகத்திலும் அரசியல் கிளர்ச்சிக்கு வித்திடப்படுகின்றதா? என்ற கேள்வி அவர்களுக்குள் எழுந்தது. உறக்கத்தில் இருக்கின்ற மலையக மக்களை தட்டி எழுப்ப எவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கக் கூடாதென்ற எண்ணத்தை நிறைவேற்ற இச்சங்கத்தின் ஆரம்பகர்த்தாக்கள் சிலரைக் கைது செய்தனர். திருவாளர்கள் ஏ.வி.மெத்தியூ, வி.ரி.தர்மலிங்கம் ஆகியோர் தலவாக்கொல்லைப் பொலீசாரால் கைது செய்யப்பட்டனர். ''இளைஞன் குரல்'' ஆசிரியர் எல்லாளன் பொலீசாரால் தேடப்பட்டார். மக்களின் பாதுகாப்பில் மறைந்திருந்து பின் வழக்கறிஞர் மூலம் சரணடைந்தார். மலையகத்தில் சமூக உணர்வுடன் செயல்பட்ட இளைஞர்கள் சமூகக் கடமைகளில் ஈடுபட்டதற்காக கைதான இம்முதல் சம்பவம் மலையக வரலாற்று ஏட்டில் குறிப்பிடத் தக்க தொன்றாகும்.

கைதானவர்கள் அவர்களின் பெற்றோர்களின் தலையீட்டினால் விடுதலை பெற்றனர். இவர்களை விடுதலை செய்த போது பொலீஸ் அதிகாரியினால் ''நீங்களெல்லாம் அரைப் படிப்பு படித்த பயல்கள் தோட்டங்களில் டான்ஸ் ஆடுகிறீர்கள், இம்மாதிரி மீண்டும் நடந்தால் உதைபடுவீர்கள்'' என ஏசி எச்சரித்து அனுப்பப்பட்டார்கள்.

இந்த நடவடிக்கையினால், அந்த இளைஞர்களின் பெற்றோர்கள் மேலும் இவர்களை இவ்வித நடவடிக்கைகளில் ஈடுபடாவண்ணம் தடுத்தனர். தோட்டத்திற்குள் கிணற்றுத் தவளைகளாக வாழும் இப்பலவீனமான பெற்றோர்களுக்கு, இக்கைது பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. இதன் பின்னர் இந்த அமைப்பும் உறங்கத் தொடங்கி விட்டது.

இவ் அமைப்போடு சம்பந்தப்பட்ட திருவாளர்கள் ஏ.வி.மெத்தியூ, எஸ்.ஜி.குருபரன் ஆகியோர் வேறு தொழிலை நாடிச் சென்றார்கள். வி.ரி.தர்மலிங்கம் தன் கல்வியைத் தொடர பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். ''இளைஞன் குரல்'' ஆசிரியர் எல்லாளனும் வேறு சிலரும் தமிழரசுக் கட்சியோடு தொடர்பு கொண்டு அக்கால கட்டத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்காக தமிழரசுக் கட்சியை ஆதரித்து யாழ்ப்பாணத்தில் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இத் தொடர்பின் காரணமாக, தமிழரசுக் கழகத்தின் ஆதரவில் ''இலங்கைத் தொழிலாளர் கழகம்'' என்ற தொழிற்சங்கத்தை அமைத்து மலையகத்தில் தொழிற்சங்கத்தின் மூலம் இந்த அமைப்பின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல முயன்றனர்.

### 'மலைநாடு நல்வாழ்வு வாலிபர் சங்கம்'

கல்வி கற்ற மலையகப் பட்டதாரிகளும், அவர்களுடன் தொடர்பு கொண்டவர்களும் மலையகத்தின் கல்வித்துறையை முன்னேற்ற வேண்டும், மலையக சமூகத்தை முன்னேற்ற வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்து ''மலையக நல்வாழ்வு வாலிபர் சங்கம்'' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. 1960ம் ஆண்டில் கண்டியைச் சேர்ந்த 'அசோகா' வித்தியாலய ஸ்தாபகர் திரு பி.ரி.ராஜன், திரு. க.பொ சிவம், திரு கே.வேலாயுதம், திரு. எஸ் நடேசன், திரு.ஏ.கருப்பையா ஆகியோர் இச்சங்கத்தை தோற்றுவித்தனர். மலையக சமூகப்பற்றுள்ள படித்த இளைஞர்கள், ஆசிரியர்கள் இவ் அமைப்பில் சேர்ந்து செயல்பட்டனர். இந்த அமைப்பு கண்டி நகரை மையமாகக் கொண்டே செயல்பட்டது. பிற நகர்ப்புறங்களிலும் இவ் அமைப்பில் இளைஞர்கள் கவனம் செலுத்தினர்.

ஹட்டன் 'பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர்களான திருவாளர்கள் இரா சிவலிங்கம், பி.எஸ்.திருச்செந்தூரன், பதுளைப் பிரதேசத்திலிருந்து திருவாளர்கள் பாரதி இராமசாமி, பெரி.கந்தசாமி போன்றவர்கள் பின் இணைந்தனர். இவர்களின் பிரவேசம் இவ் அமைப்புக்கு புதிய உணர்வலைகளைக் கொண்டு வந்தது. படித்த நகர்ப்புற இளைஞர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற இவ்வமைப்பு தோட்டப்புற இளைஞர்களையும் நாடிச் செல்ல வைத்தது. அதற்கேற்றாப் போல் செயற்பாடுகள் அமைந்தன.

கலைத்துறை மூலமே மலையக இளைஞர்களின் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று அவர்கள் பங்குபற்றக் கூடிய ''கலைவிழா'' ஒன்றினை கண்டியில் மிகவும் பிரமாதமாக நடத்தினர். பரந்தளவில், மலையகப் பகுதிகளிலிருந்து ஆர்வத்துடன் பலரும் பங்குபற்றினர். நாடகம், கும்மி, கோலாட்டம், கரகம், நடனம் போன்ற பல சிறப்பான நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம் பெற்றுப் பலரின் பாராட்டுதலைப் பெற்றது. மலையகக் கலைகளுக்கு புத்துயிர் அளிக்கப் புறப்பட்டது போல் இது வர்ணிக்கப்பட்டது.

இவ் அமைப்பில், குறிப்பிட்ட சிலர் முற்போக்குக் கொள்கை உடையவர்களாக இருந்தபடியால் அதன் தாக்கம் இந்த அமைப்பில் வெளிவரத் தொடங்கியது. திரு.க.பொ.சிவம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு, இந்த அமைப்பின் சார்பாக ''மலைமுரசு'' என்ற மாத சஞ்சிகை வெளியிடப்பட்டது. மலையகப் பிரச்சினைகளை கருப் பொருளாகத் தாங்கி பல இலக்கிய வடிவங்களில் இலக்கிய படைப்புகளை முதன் முதல் இம் ''மலைமுரசு'' ஏடு பிரசுரித்தது. இச்சஞ்சிகையின் ஆரம்ப எழுத்தாளர்களாக அறிமுகப்படுத்தப்பட்டவர்கள் ஈழத்து இலக்கிய வானில் சிறந்த எழுத்தாளர்களாக பிரகாசித்தார்கள்.

இந்த அமைப்பில் முற்போக்குக் கொள்கையாளர்களின் செயற்பாடுகள் விரிவடைந்து, அதன் தாக்கம் இளைஞர் மத்தியில் பீரிட்டு எழத் தொடங்கியது. இது அந்த அமைப்பைச் சேர்ந்த பிற்போக்கு வாதிகளினால் ஜீரணிக்க முடியவில்லை. நகர்ப்புற இளைஞர்களை வைத்

### எல்லாளனைத் தேடிய பொலிஸார்

துக்கொண்டு ஒரு மேல்மட்ட அமைப்பாக செயல்பட எண்ணிய இவர்களுக்கும், மலையக மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சிக்கு இந்த அமைப்பினை ஒரு உந்து சக்தியாக ஆக்க எண்ணிய முற்போக்கு சிந்தனையாளர்களுக்குமிவையே முரண்பாடு எழுந்தது. இந்த முரண்பாடு அமைப்பில் வெடிப்பை ஏற்படுத்தியது.

தோட்டப்புற இளைஞர்களைப் பிரதானமாகக் கொண்டு செயல்படத் துடித்த திருவாளர்கள் இரா.சிவலிங்கன், பி.எஸ்.திருச் செந்தூரன், பாரதி இராமசாமி ஆகியோர் இவ் அமைப்பை விட்டு வெளியேறினர். மலையக மக்களிடையே அரசியல் சிந்தனையை ஏற்படுத்த முனைந்த இவர்களின் எண்ணம் தோல்வியடைந்தது. இந்த அமைப்பில் இழையோட ஆரம்பித்த புதிய உணர்வலைகள் ஓய்ந்தன. சமூகப் பற்றுக் கொண்ட நடுநிலையாளர்கள் மௌனம் சாதித்தனர். படிப்படியாக இந்த அமைப்பின் செயற்பாடுகள் செயல் இழந்தன. இந்த அமைப்பும் ''இளைஞர் தமிழ்ச்சங்கம்'' என்ற அமைப்பும் ஒரே கால கட்டத்தில் தோன்றி செயல்பட்ட போதிலும் இரண்டிற்கும் எவ்வித தொடர்பும் ஏற்பட்டிருக்கவில்லை. இந்த அமைப்பிலிருந்து வெளியேறிய முற்போக்கு சக்திகள், தங்கள் உணர்வுகளை பலவித்திலும் வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தனர். மலையக இளைஞர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி செயல்பட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் ''மலையக நல்வாழ்வு வாலிபர் சங்கம்'' அமைப்புரீதியால் செயலிழந்தது.

- வரும்

## யாழ்ப்பாணத்திலிருந்து அஸ்வகோஸின் மூன்று கவிதைகள்

### விடை பெறுதல்

கைகளை ஒங்குவது போலிருக்கும்
பயமுறுத்தும் நோக்கம் இல்லை!
போய் வாருங்கள்!
முன்னும் பின்னுமாய் எத்தனை நிகழ்வுகள்!
திகதிகள் நினைவில் இல்லை!

எந்த உண்மை எம்மை இணைத்தது
எந்த பேருண்மை பிரித்தது!
மிக வேகமாக பயணித்த போதும்

வரண்ட நிலங்களை தாண்ட முடியவில்லை.
(சில நண்பர்களை பெற்றுக் கொண்டேன்)

தேவதைகள் நிறைந்த கனவுகள்
கலைந்த விடிகாலை பொழுது!
கண்முன் எதுவும் எஞ்சவில்லை!
(எத்தனை தரந்தான் இப்படி எழுதுவது)

ஜீவனும் உணர்வுமாய் இத்தனை மனிதர்கள்
வாழ்ந்து போனபின்
மனதில் பதித்த வரிகளை மீறி
ஏதாவது சொல்லப்பட உள்ளதா!

தயை கூர்ந்து
என் ஆன்மா நாணமுற
சபித்து விடுங்கள்.
இன்று விடைகோரும்
கடிதங்களை வரைவேன்

### மலரினை சாத்துமென்!

இரத்த மூறிடும் கால இடுக்கில்
புதைக்கப்பட்ட நண்பரின் மேலொரு
மலரினை சாத்துமென்!

மரண ஊற்றில் கரைந்தவர்
முகங்களை தேடுதல் அபத்தமே ஆயினும்
உயிர்களை இழந்தும்
ஆழப்பாயும் வேர்களின் வீர்யம்
மண்தான் அறியும்!
இரைச்சலை மேவி இசைக்கும் நாளில்
எம் நண்பர்கள் இசைத்த கீதங்களாலொரு
மலரினைச் சாத்துமென்!

### எதிரொலி

சத்தமிட்ட வண்ணம்
மலைகள் ஆறுகள் காடுகள் கடல்கள்
வெளிகள் தாண்டி
தூரத்தூரப் போகும்
எதிரொலியை துரத்திப் பிடிக்க
நான் ஓடிக் கொண்டிருந்தேன்.

பட்டப்பகலில்
குப்பி விளக்குகளுடன்
தத்வஞானிகள் பாதையில்
சரிந்து கிடக்கையில்
இடரி விழாதிருக்க
தாண்டி தாண்டி நான்
ஓடிக் கொண்டிருந்தேன்
எதிரொலியை கேட்பதற்காக!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர் நடாத்திய சிறுகதைப் போட்டியில் 3ம் பரிசு பெற்ற சிறுகதை

# கரைந்து வழியும் காலங்கள்

''பறத்தெமிலா பறத்தெமிலா'' அந்தப் பொலிஸ்காரர்களெல்லாம் இப்பிடித்தான் அன்பொழுக அழைத்தார்கள்; இவனை மட்டுமல்ல தமிழர்களென்ற சந்தேகத்தின் பேரில் இங்கு பிடித்துக் கொண்டு வரப்படும் எல்லாத் தமிழர்களையும் இவர்கள் இந்த நாமம் சூட்டித்தான் அழைப்பார்கள்.

பார்க்கும் போதும் நடக்கும் போதும், முகத்தில் ஓங்கி முஷ்டியால் குத்தும் போதும், சிலநேரம் இவர்களுடைய மனைவிமாரை யோனியும் முலையும் நெரிபட நெரிபட முண்டமாய் கட்டிப்பிடித்துக் கொண்டு தூங்கும் இரவுகளிலும் கூட திடுக்கிட்டு திடீரென விழித்தெழும்பி இப்பிடித்தான் அழைப்பார்களோ என்னவோ தெரியாது.

இந்தப் பொலிஸ்காரர்களெல்லாம பறத்தெமிலா என அழைப்பதை விட பீய்த்தமிழா என நாமம் சூட்டி அதை இந்த நாட்டின் அரசியல் யாப்பில் இணைத்து இலங்கைத் தமிழர் என்பதற்கு பதிலாக பீய்த்தமிழன் அல்லது பேய்த்தமிழன் என அழைத்தால் இன்னும் நன்கு பொருந்தும். அந்தளவுக்கு ஒருத்தரையொருத்தர் காட்டிக் கொடுத்து, பழைய டயர்களுக்கு புதிய வேலை கொடுத்து சுட்டு, எரித்து, பொசுக்கி, அடித்துதுரத்தி நாசமாய்ப் போன ஒரு புதிய நாகரீகத்தின் தோற்றுவாய்களல்லவா இந்த இனம்.

அழுகிய பிணங்களை அடுக்கி வச்சமாதிரியான நாத்தம் இவன், இவனுடன் இன்று புதிதாய் பிடித்து வரப்பட்டவர்களுமாய்ச் சேர்த்து ஒன்பது தமிழர்கள் நான்கு குடுக்காரனுகள் ஒரு பிற்பொக்கற்காரன், ஒரு ஏஜென்சிக்காரன் இத்தனை பேரும் அந்தப் பொலிஸ் நிலையத்தின் சின்ன இரும்புக்கூட்டுக்குள் நிமிரவும் குனியவும் இருக்கவும் இடமில்லாமல் இறைச்சிக்கடையில் கழுத்து முறிபட்ட கோழிமாதிரி விழிபிதுங்கி வியர்வை நாற்றம் வழிந்தோட நின்றிருந்தார்கள்.

ஏஜென்சிக்காரன் மட்டும் புறுபுறுத்துக் கொண்டிருந்தான். ''லொக்கு மாத்தையா ஸ்பெசல் கோஸ் ஒன்றுமுடிக்க இந்தியா போயிட்டார். இல்லாட்டி இந்த ஸ்ரேசன் ஓ.ஐ.சிக்கு நாக்கு வழிக்க வைப்பேன். இருக்கட்டும். வேசையிர மகன லொக்கு மாத்தையா இந்தியாவில இருந்து வந்துவுடனை முதல் வேலையா யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கிறன். நாயிரமகன் அங்கு போய் அடிபட்டு சாகட்டும்'' என்றபடி ஆவேசமாய் திட்டிக் கொண்டிருந்தான்.

ஏஜென்சிக்காரனைப் பார்க்க மட்டும் எந்த தங்குதடையுமின்றி நிறையப் பெரிய மனிதர்கள் வந்து போனார்கள் அவர்களில் எல்லா இனமத மனிதர்களும் இருந்தார்கள். ஏஜென்சிக்காரனின் கரங்களைத்தடவி ஒரு குழந்தைக்கு ஆறுதல் சொல்வது போல் எல்லோரும் ஏதேதோ சொன்னார்கள். எல்லாம் கதைக்க வேண்டிய இடத்தில கதைச்சுப் போட்டம் இரவுக்கு அல்லது நாளைக்கு வெளில வந்து விடலாம் கவலைப்படாதே என்றனர்.

தமிழ்ப்படத்தில வாற வில்லன்மாதிரி கம்பிகளைப் பிடித்துத் தள்ளிக்கொண்டிருந்த ஏஜென்சிக்காரனுக்கு கொகாகோலோவும், சுவிற்சும் சோட்டிற்சும், சாப்பாடும், கோல்ட்லீப் பைக்கட்டும் நேரம் தவறாமல் வரும். அவன் திண்டு போட்டு மிஞ்சிறதை இவர்களிடம் நீட்டுவான். அதையும் இந்த பிற்பொக்கற்காரத் தடியன் ஆருக்கும் கொடுக்காமல் விழுங்கிவிடுவான். பார்த்தால் முறைப்பான் 'கொட்டியா' என பல்லைக்கடித்துக்கொண்டு அடிக்க வருவான். அதையெல்லாம் வெளியேயுள்ள பொலிஸ்காரர்கள் பார்த்துப் பார்த்துச் சிரிப்பார்கள்.

இரும்புக்கம்பிகளுக்கு வெளியே இடையிடையே ரிப்டொப் உடையில் வந்து போகும் மனிதர்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் துளைத்தெடுப்பார்கள். சுத்தமான யாழ்ப்பாணத்தமிழ் கணீரென்று ஒலிக்கும். அடேய்பு..... மகனே நீ எந்த இயக்கம்டா? என்னத்தெரியுமாடா? உண்மையைச் சொல்லுடா? அவர்களின் கேள்விகளும் அதட்டலும்... ஈரல்கருகி வெளியே மணக்கும். கூட்டுக்குள் எல்லோரும் மட்டக்களப்பு பில்லி சூனியக் கதைகளில் வருபவர்களாய் கூனிக்குறுகிப் பிரமித்து நிற்பார்கள்.

விடுதலை, போராட்டம், அர்ப்பணிப்பு, தியாகம் எல்லாம் பொய் மாலங்கள் தானா? இவர்களுக்கும் அவர்களுக்கும் இதெல்லாம் எங்கே தெரியப்போகிறது? பிழைக்க மட்டுமே தெரிந்தவர்கள் குருதியிலும், குண்டுகளிலும் சுகம் தேடுபவர்கள். உண்மைகள் அவர்களுக்கெங்கே தெரியப் போகிறது? சொந்தமண்ணை மிதிக்க முடியாத வேதனையில் அன்னியத் தெருக்களில் அலைந்து கொண்டு எத்தனை மனிதர்கள், அவர்களின் உண்மைகளெல்லாம் இவர்களுக்கு எதுக்கு? பிலாக்காய்ப் பிசினாய் வாழ்வு மட்டும் நீள்வதும் அறுபடுவதுமாய் காலங்கள் தான் கரைந்து வழிந்து கொண்டிருக்கின்றன.

குடுக்காரர்கள் பரலோகத்தில் இருக்கிற ஆண்டவருடன் பேசிக் கொண்டிருந்தார்கள். நாலைந்து நாட்களாய் சொர்க்கத்துக்கு போய் வரமுடியாத வெறியும் வேதனையும் அவர்களின் முகங்களில் உறங்கிப் போயிருந்தது. ஒரு வெறித்தனமான ஆக்ரோஷத்துடன் இடையிடையே பொலிஸ்காரர்களைத் திட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் உடம்புகளில் தசைகளை எக்ஸ்ரேயில் போட்டு தேடினாலும் கண்டுபிடிப்பது கஸ்ரம் எலும்பும் தோலும் தான் துருத்திக் கொண்டிருந்தன. முகமெல்லாம் பார்க்கப் பயமாய், பயங்கர விகாரமாய், கோணல் மாணலாயிருந்தன. உதடுகள் அருவருப்பாய் தொதல் துண்டைப்போல் கறுத்துத் தடித்து ஊதித் தொங்கிக் கொண்டிருந்தன.

அந்தக்குடுக்காரர்களில் தமிழ் தெரிந்த ஒருவன் இவர்களைப்பார்த்துப் பேசினான். ''மச்சான் யாழ்ப்பாணக் கட்டியா தானே?'' ஓங்கட ஊர்ல எப்ப மச்சான் கரச்சல் சரிவாற? முந்தி மாதிரி இல்ல மச்சான் வடு இப்ப சரிரேட், கரச்சல் கொஞ்சம் கொறஞ்சா ஓங்கட ஆக்களுக்கும் நல்ல விஸ்னஸ், எங்களுக்கும் வடு ஹொந்தாய் மச்சான், இப்பபாரு மச்சான், சும்மா சும்மா இவனுகள் சண்டபுடிச்சிக்கிட்டு எங்களுக்கு தான் கரச்சல்...'' கறுத்த உதடுகளிலிருந்து நூலாய் எச்சில் வடிய வடிய அவன் பேசிக் கொண்டேயிருந்தான்.

குவித்துவிட்ட பிணங்களை சரித்துக் கிடத்திய மாதிரி ஒருத்தரையொருத்தர் முட்டிக் கொண்டும், உரசியபடியும் உட்கார்ந்திருந்தார்கள் குடுக்காரன் விட்டபாடில்லை. எல்லோருக்கும் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தார். அவனின் வாயிலிருந்து செத்து அழுகி புழு துடிக்கிற எலியின் நாற்றமாய் நெடில் காற்றில் கலந்து கொண்டிருந்தது. எல்லோரும் மூக்கைச் சுளித்தபடி காற்றை வெளியே தள்ளி வெறித்தபடி குந்திக் கொண்டிருந்தார்கள். இதைவிட இந்தச் சின்ன இரும்புக்கூட்டுக்குள் என்னதான் செய்யமுடியம்?

குடுக்காரனின் உடம்புகளில் மாட்டுக்குறி வைத்தமாதிரி கோடுகோடாய் பிளேட்டால் கீறிக்கிடந்தது. அந்தத் தழும்புகளில் சில இடங்கள் அயர்பிடித்து மஞ்சள் கட்டிப் போயிருந்தன. சில காய்ந்து போன தழும்புகளாய் மேலே கறுத்து அயர்பிடித்துப் போயிருந்தது. அவற்றை விரல்களால் கிள்ளி நசித்து உருண்டையாக்கி அசிங்கம் செய்து கொண்டிருந்தான் அந்தக் குடுக்காரன்.

இடைக்கிடையே பொலிஸ்காரர்கள் கம்பிகளுக்கு வெளியே எட்டி எட்டிப் பார்த்தார்கள். விழிகளையுருட்டி முறைத்தார்கள். உதடுகளைக் கடித்துக் கொண்டு நடந்தார்கள். இன்னும் எத்தனை நாளைக்கு இந்த இரும்புக் கூட்டுக்குள் உப்பில்லாத பருப்பையும், கல்லுக்குள் கிடக்கும் சோற்றுப் பருக்கைகளையும், சம்பலையும் பாணையும் தேவதூதர்தகளுக்கு கிடைத்த தேவாமிர்தமாய் கம்பிகளுக்கு வெளியே கைநீட்டி வாங்கி இந்த நாற்றங்களையெல்லாம் சகித்தபடி வாயில் போட்டு வயிற்றை நிரப்பி....

மூன்று பக்கமும் சுவர். மேலே உயரத்தில் கொங்கிறீட் போட்ட அடைப்பு முன்பக்கம் ஐந்துகம்பிகளை நீளமாய் நிமிர்த்தி அதன் இடையே சற் (Z) வடிவத்தில் கம்பிகளை இணைத்து வெல்டிங் பண்ணிய கனமான இரம்புக் கதவு கறுப்புப் பெயின்ற் பூசி இருந்தது. வலதுபக்கம் இரண்டாவது கம்பியுடன் இணைத்து பெரியதோர் பித்தளைப்பூட்டு குறைந்தது இரண்டு கிலோவாவது இருக்கும். மேட் இன் சைனா என ஆங்கில, சைனிஸ் எழுத்துக்கள் பொன்மஞ்சளாய் பளிச்சிட்டன.

உங்கள அந்தக்கரடு முரடான சுவரின் மேல் நிறையவே கிறுக்கல்கள். தமிழ், சிங்களம், ஆங்கிலம் மும்மொழிகளிலும் தேசிய உணர்வு எதிரொலித்தது. ஏதேதோ நிறையவே கிறுக்கல்கள். பேர், ஊர், துண்டுத் துண்டுக் கவிதைகள், எச்சரிக்கைகள், காதலின் இறுதி அஞ்சலிகள், ஓர் ஆணும் பெண்ணும் கலவியில் ஒன்றாய்ப் போனமாதிரி ஆண்குறி, பெண்குறி மாதிரியான வடிவங்கள், குறியீடுகள் இத்யாதி இத்யாதி ' இன்னும் எத்தனை எத்தனை வடிவங்கள், அசிங்கங்கள் அந்தச் சுவரின் மேனியெங்கும். அதன் மேல் மூட்டைப்பூச்சிகள் குஞ்சிகளுடன், கூட்டம் கூட்டமாய் ஊர்வலம் போயின.



சூவில் (Zoo) இரும்புக் கூட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் மிருகங்களுக்கு இருக்கிற சுதந்திரம் கூட இல்லாமல் தமிழனாய்ப் பிறந்த ஒரேயொரு இனத்துவமுரண்பாட்டுக்காக கிரிமினல் குற்றவாளிகளுடன் இந்தச் சின்ன இரும்புக் கூட்டுக்குள் அடைபட்டு, ஒட்சிசன் பிரித்தெறியப்பட்ட நாத்தக்காற்றை உள்வாங்கி, பொலிஸாரின் வசைபாடலுக்கு தலைகுனிந்து விசாரணையின் போது முகத்திலும் நெஞ்சிலும் விழும் அடி உதைகளை வாங்கி பறத்தெமிலா வேசிக்க புத்தா....

சுவரில் முதுகைச் சாய்த்தபடி உட்கார்ந்திருந்த இவனின் முதுகுத்தோலை குத்தித்துளைத்தெடுத்து மூட்டைப் பூச்சிகள் உறவு கொண்டாடின. அசைந்து நெளித்து அவதிப்பட்டு அடிக்கடி எழும்பினால் எல்லோரும் இப்பிடித்தான். இந்த அடைப்புக்குள் குந்திக் கொண்டிருப்பதும் மூட்டைப்பூச்சிகள் கடிக்கத் தொடங்கினால் எழும்பிக் கொள்வதும் பின்னர் குந்திக் கொள்வதுமாய் இன்றுடன் பதின்மூன்று நாட்களைக் கழித்து விட்டான். விஷமுள்ளில் உட்கார்ந்தபடி இந்தப் பதின்மூன்று நாட்களும் நரகத்தில் கழிந்து கொண்டிருக்கிறது.

பின்பக்கம் இந்தக்கூட்டோடு இணைத்துக் கட்டப்பட்டிருந்த கக்கூஸ் கோப்பைக்குள் குந்திக் கொண்டு கால்களை இடத்து விரித்தபடி முக்கிக் கொண்டிருந்தான் இந்தத் தடிப்பயல் பிற்பொக்கற்காரன். அவனுக்கு • இன்றுடன் இரண்டு நாட்களாக லூஸ்மோசன் அடிக்கடி போய்க்குந்திக் கொள்வான். பறக்பறக் என்ற சத்தமும் அழுகின முட்டைமாதிரி நாத்தமும் வரும். ஒழுங்காகக் கழுவிக் கொள்ளாமல் இவர்களுக்கிடையே வந்து குந்திக். கொள்வான். சிலநேரம் நக இடுக்குகளுக்கிடையே மஞ்சளாய் அது ஒட்டிப் போயிருக்கும். சாறத்தால் துடைத்தபடி ஈரம்பிசுபிசுக்க அப்படியே உட்கார்ந்திருப்பான். இடையிடையே விரலை மூக்கில் வைத்து முகர்ந்து கொள்வான். பார்க்கப் பார்க்க பற்றியெரியும். இதுக்குள் இருந்து கொண்டு என்னதான் செய்யமுடியும்.

கொஞ்சநேரம் கழித்து ஒரு பொலிஸ் அதிகாரி வந்தான். உள்ளே இருந்த இருவரின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான். முகத்தை உற்றுநோக்கினான். அவர்களுக்கோ பயத்தால் உடம்பெல்லாம் நெளியத் தொடங்கியது. அவனைத் தொடர்ந்து இந்த இருவரின் உறவினர்களும் சிரித்த முகத்துடன் உள்ளே வந்தார்கள். இதுக்குப்பிறகு தான் இவர்களின் ஆட்டம் குறையத் தொடங்கியது.

பொலிஸ் அதிகாரி போனபின்னர் இவர்கள் தொடங்கினார்கள். ''இங்க வந்து போறவர் தான் லொக்கு மாத்தையா. எல்லாம் கதைச்சுப் போட்டம். கொண்ணை இரவும் லண்டலில இருந்து கோல் எடுத்தவர். எவ்வளவு குடுத்தெண்டாலும் உங்களை எடுக்கச் சொல்லிப் போட்டார். ரெண்டுபேருக்கும் இருபத்திஞ்சி கேட்டவர். நாங்க பத்துப்பத்து தான் குடுத்திருக்கம்.'' அவர்கள் பேசி முடிய முன்னரே ஒரு பொலிஸ்காரன் வந்தான். கணீரென்ற சத்தத்துடன் பூட்டு விரிந்து அந்த இரும்புக் கதவு திறந்து கொண்டது. உள்ளே இருந்த அந்த இருவரும் வெளியே போனார்கள். அவர்கள் மறையும் வரை, மீதியாய்ப் போன இவர்களின் விழிகளெல்லாம் அந்த மறைவுவரை உற்றுநோக்கின.

இவர்களுடன் உள்ளுக்குள் இருந்த ட்றைவர் கந்தசாமியர் கண்களில் நீர்வடியத் தேம்பித் தேம்பி அழுதார். ''மனிசியும் பிள்ளையளும் என்னபாடோ? சாப்பாட்டுக்கு என்ன செய்யுதுகளோ? கோதாரிப் புடிப்பானுகள் ஷெல் அடிக்கிறானுகளோ பொம்பர்ல வந்து கொட்டுறானுகளோ என்ர புள்ளையள் என்னபாடோ? அதையும் விட எனக்கு பிணைக்கு ஒப்பம் வச்ச செல்லத்தம்பி மாஸ்ரரை இப்ப எங்கெங்க வச்

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிருங்காங்களோ?மனிசன் பங்கர் வெட்டுறாரோ தும்பு அடிக்கிறாரோ பாவம்,'' மனிசன் சொல்லச் சொல்லி அழுதார். வயசு ஐம்பது இருக்கும். தலையும் மீசையும் நரைத்து கிழடாகிப்போகிற இந்தக் காலத்தில இவரிலையும் சந்தேகம்!

மகனை சவூதிக்கு அனுப்ப வந்தவர், அனுப்பிப் போட்டு வவுனியாவுக்கு ரயில் ஏற வந்தவர கோட்டை ஸ்ரேசன்ல வச்சி இவர்கள் ஏற்றிக் கொண்டு வந்து விட்டார்கள். சவூதிக்கு போக முதல் இதே பொலிஸ்காரர்கள் தான் இவர்ர மகனையும் பிடித்துக் கொண்டு போக இங்க இருக்கிற ஆரோ இயக்கப்பொடியன்மாரிட்ட தான் ஐயாயிரம் ரூபா கொடுத்து வெளில எடுத்தவர். அவன் தான் பொடியன் எண்டு பிடிச்சாங்கள் என்று சொல்லலாம். இந்த வயசு போன காலத்தில என்னில என்ன சந்தேகம்? தம்பி, இங்க தமிழனென்றால் சந்தேகம். அங்க தமிழனாகவிருந்தும் வாயத்திறந்தால் சந்தேகம். இந்தத் தேசம் எப்பிடி மாறிப்போயிற்று? இரும்புக்கூடு, பங்கர், பழைய டயர்.....

உள்ளுக்குள் இருந்த எல்லோரையும் ஒவ்வொருவராய் அழைத்து இன்றோடு நாலாவது தடவையாக விசாரிக்கத் தொடங்கினார்கள். திரும்பத் திரும்ப பிங்கர்பிறிண்ட், போட்டோ எடுத்தார்கள். இவன் நிலத்தில் கைகட்டி இருந்தான். காலுக்கு மேல் கால் போட்டபடி கைகளில் கறுப்புவெல்ட்டும் எஸ்லோன்பைப்பும் வைத்து ஆட்டியபடி நாலைந்துபேர் விடாமல் கேள்வி கேட்டார்கள்.

ஊர், பெயர், தொழில் படிப்பு, பூர்வீகம், கல்யாணம், காதல் முடிய கொழும்புக்கு எப்ப வந்தனீ? இப்ப என்ன செய்யிறாய்? ஏன் வந்தனீ? இவ்வளவு நாளும் என்னென்ன செய்தாய்? கொழும்பில எங்கெங்கு. இருந்தாய்? எந்த இயக்கம்? இல்லையென்றால் ஏன் இயக்கத்துக்கு போகயில்லை? வெளிநாட்டில அண்ணன் தம்பி சொந்தக்காரர் இருக்கிறார்களா? கொச்சைத்தமிழில் ஒருவன் மொழிபெயர்த்தான். அவர்களின் கேள்விகளுக்கு பதில்கள் வெளிவரத் தாமதிக்கும் போதெல்லாம் எஸ்லோன் பைப்பும், வெல்ட்டும் தாமதியாமல் பதில் சொல்லும். பறத்தெமிலா, வேசிக்க புத்தா வார்த்தைகள் நெருப்பாய் வந்து நெஞ்சில் எரியும்!

விசாரணையும், வேதனையும் முடிய திரும்பவும் கூட்டுக்குள் அடைபட்டான். கூட்டி வரும் போது அந்தப் பொலிஸ்காரன் இவனிடம் சொன்னான் ''லொக்கு மாத்தையாவுக்கு ஒரு சப்போட் குடு, உன்ன ரிலிஸ் பண்ணிவிடுவார். இல்லாட்டில டீ.ஓ (தடுப்புக்காவல்) அடிச்சி உள்ள் போட்டு விடுவாங்க....'' சப்போட் எங்கே போவது? அதுவும் இந்த கொழும்பில வெளில இருக்கும் போது அன்றாடம் பிளேன்ரிக்கும் பாணுக்குமே நாயாய் அலைந்து கொண்டிருக்கும் இந்த வாழ்க்கையில், லொக்கு மாத்தையாக்கு எப்பிடி சப்போட் குடுக்கிறது. இந்த பொலிஸ்காரர்களை விட இந்த சப்போட் தான் நினைக்கவே அவனுக்கு பயமாக இருக்கிறது.

சூரியன் ஓடி ஒளித்து இருள்மூடிய நேரம் எஸ்லோன் பைப், வெல்ட் பட்ட இடங்கள் தடித்து சிவத்து வலித்தன. விரல்களால் மெதுவாக தடவிப்பார்த்தான். மனசுக்குள் துயரமாய் இருந்தது. கூட்டுக்குள் எந்த வெளிச்சமுமில்லை. முன் அறையில் எரிந்து கொண்டிருக்கும் லைட்டின் வெளிச்சம் உள்ளே பட்டுத்தெறித்தது. பூட்ஸ் கால்கள் கடகடக்க காக்கிச் சட்டைகளுடன் பொலிஸ்காரர்கள் நடந்து திரிந்தார்கள்.

இன்று புதிதாய்ப் பிடித்து வரப்பட்டவர்கள் உள்ளே முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள். ''தம்பி அடிச்சிக்கிடிச்சி ஏதும் செய்வானுகளா? வயலில் வேல செய்து கொண்டிருந்தாப் போல ரெண்டு வருஷத்துக்கு முந்தி புடிச்சிக் கொண்டு வந்து மகசினில வச்சிருக்கிற என்ர மகனப்பார்க்க வந்த நான், இப்ப என்னடா ?ண்டால் என்னையும் புடிச்சி வந்திட்டானுகள். என்ன அநியாயம் தம்பி, நம்மிட இயக்கக் காரப் பொடியளுக்காகவது இதெல்லாம் விளங்குறதில்லையா?....'' இவனுக்கருகில் இருந்த ஒரு கிழவர் காதோடு காதாய்க் குசுகுசுத்தார். அந்தக் கிழவரைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. இவனுக்கு எதுவும் சொல்ல மனசில்லாமல் தலையை மட்டும் ஆட்டினான் இல்லையென்று.

இன்னும் எத்தனை நாட்கள் இப்பிடியே வாழ்வது? நெரிபட்டு, அடைபட்டு, நசிபட்டு, குளித்து பல்லுத்தீட்டி எத்தனை நாட்கள்? பற்கள் வழுவழுத்தன. உடம்பெல்லாம் வியர்வை படிந்து ஊத்தை ஒட்டிப் போயிருந்தது. மூட்டை கடிக்கும் போது எங்கேயாவது சொறிந்தால் நகத்துக்குள் பட்டை பட்டையாய் ஊத்தை உருண்டு திரண்டு ஒட்டிக் கொண்டு வரும்.

மூக்குக்குள் நுழையும் நாத்தமும் வெக்கையும் வயிற்றைக்குமட்டி வயிற்றிலுள்ள எல்லாம் வெளியே வந்துவிடும் போலிருக்கும். இவனுடைய றூம்க்காரக் கிழவன் சுதுபண்டாவும் அந்த நோனிக் கிழவியும் தான் இந்நேரம் இவனைப்பற்றி எதையாவது சொல்லிப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

காஞ்ச பாணைக் கடித்துக்கொண்டிருக்கும் போதெல்லாம் சோற்றுப் பீங்கானுடன் வந்து சிரித்துக் கொண்டிருக்கும் நோனிக் கிழவி '' தம்பி இப்ப ஒங்கட ஆக்கள சும்மா சும்மா பொலிஸ்காரன் புடிச்சுக் கரைச்சல் குடுக்கிறான். அங்க இங்க போகாதிங்க. சும்மா றூமிலேயே இருங்க. நாங்க தின்கிறதில ஒனக்கும் தருவம். நீயும்-நம்மட புள்ளமாதிரித் தானே'' என்று அடிக்கடி புத்தி சொல்லும் சுதுபண்டாக் கிழவன் இவனில் மனிதர்களாய் வந்து போனார்கள்.


இவன் உள்ளே இருப்பது தெரிந்தால் சுதுபண்டாக் கிழவனும் நோனிக் கிழவியும் எப்பிடியும் வந்து வெளியில எடுத்துவிடுவார்கள். அவர்களுக்குத்தான் எப்படித் தெரியும்? அவன் இங்கே இருப்பது? நாலைந்து மாச றூம் காசு கொடுக்காமல் தமிழனுக்கே உரிய நாய்ப் புத்தியுடன் ஓடிவிட்டான் என்று மட்டும் நினைக்காமல் விட்டால் போதும் இப்போதைக்கு!

அதையும்விட இவன் ஒவ்வொருநாளும் காலையில பேப்பர் படிக்கிற அந்த சலூன் விலாசத்துக்கு கோணல் மாணலாய் எதையாவது நொந்து திட்டியபடி கிறுக்கி எழுதிய அம்மாவின் கடிதம் ஒன்றோ இரண்டோ வந்து கிடக்கும். இதைத் தவிர இந்த உலகத்தில இப்போதைக்கு எல்லாமே வெற்றிடங்கள் தான்.

இந்த இரும்புக்கூடு மட்டுமல்ல, எதிர்த்தெரியும் இந்த உலகம் கூட அவனைப் பொறுத்தவரை ஒரு கொடூரம் தான். துரத்தித் துரத்தித் தோற்றுப்போன உலகமும் சமூகமும், ஒரு பிடிச் சோறு, இருக்க ஒரு இடமில்லாமல் அழிந்து போய்க் கொண்டிருக்கும் உறவுகள், எல்லாமே பூச்சியம்தான். இதெல்லாவற்றையும் விட இனியும் கூட இருத்தல் என்ட.து எதுவரை? அந்தக் கறுப்புக் கம்பிகளுக்கு வெளியே விழிகளை விட்டு துலாவினான். சுவரும் லைற்றும், பூட்ஸ் கால்களின் ஒலியும் காக்கிச்சட்டைகளையும், தவிர, வேறேதும் தென்படவில்லை. அருகிலிருந்த ''சந்தேகம்''கள் குந்தியிருந்தபடியே தூங்கிக் கொண்டிருந்தார்கள். மூட்டைப் பூச்சிகள் குஞ்சுகளுடன் ஊர்வலம் வந்து கொண்டிருந்தன. இதுவும் ஒரு உலகம் தான்.

இவனுக்குத் தூக்கம் வரவேயில்லை. நினைவுகள் குழம்பின. இந்நேரம் இவனுக்காக எந்த எந்தக் கடவுள்களை அம்மா கூப்பிட்டுக் கொண்டிருப்பாளோ? அந்த றூம்கார சுதுப்பண்டாவும் நோனியும் என்ன செய்து கொண்டிருப்பார்களோ? இவனுடைய ஊரின் வேலி அலரி மரங்களில் தேன் குடிக்கும் மாம்பழக் குருவிகள் இப்பவும் வந்து போகுமோ என்னவோ? அந்தச் சவுக்கம் தோப்புகள் நண்பர்கள் எல்லாம் எங்கெங்கோ? ''மச்சான்'' எல்லாவற்றையும் குழப்பியபடி குறைபீடியை நீட்டிக் கொண்டிருந்தான் அந்தக் குடுக்காரன். குறைபீடி இவனின் கைக்கு மாறி புகை நெடி பரவிக் கொண்டிருந்தது.

ரவிவர்மன்




## 19வது இலக்கியச் சந்திப்பு: சில அவதானக் குறிப்புகள்.

- துடைப்பான்

19வது ஐரோப்பிய இலக்கிய ஆர்வலர்களின் சந்திப்பு கடந்த செப்ரெம்பர் 24, 25ம் திகதிகளில் லண்டன் Conway Hall இல் இடம் பெற்றது. ஐரோப்பாவின் பல பாகங்களிலும் புலம் பெயர்ந்து வாழும் இலக்கியப் படைப்பாளிகளும், ஈழத்திலிருந்து எம்.ஏ.நுஹ்மான் சி.சிவநேசச் செல்வன் ஆகியோர்களும் இவ் இலக்கியச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

முதலாம் நாள் நிகழ்ச்சி புகலிட இலக்கியம் எனும் தலைப்பில் திரு.இ.பத்மநாப ஐயர் தலைமையில் இடம்பெற்றது. புகலிட, இலக்கியத்தின் அடிப்படைகள் பற்றி ஜேர்மனியிலிருந்து ந.சுசீந்திரன் அவர்களும், புகலிட இலக்கியத்தின் வெளிப்பாடுகள் தொடர்பாய் சி.சிவசேகரம் அவர்களும் கருத்துரை வழங்கினார்கள். புகலிட இலக்கியம் என்பதற்கு குறைந்தபட்ச வரையறை என்ன என்பது தொடர்பாக ஒரு குழப்பமான போக்கினை இதுவரை காலமும் நடைபெற்ற இலக்கிய சந்திப்புகளில் காணக்கூடியதாக விருந்தது. அதன் தொடர்ச்சி இங்கும் 'புலம் பெயர்ந்தோர் இலக்கியம்', புகலிட இலக்கியம் இவ்விரு வார்த்தைப் பிரயோகங்களும் பல்தரப்பட்ட பரிமாணங்களைக் கொண்டிருப்பதாக இச் சிறியோனின் அறிவுக்கும் எட்டுகின்றது. இதுபற்றி கற்றறிந்தோர் இயம்பவது நலம்.

புகலிட இலக்கியம் எனும் போது தாங்கள் வாழும் பிரதேச மொழி பெயர்ப்புகளும் அடக்கம் என்பது என் எண்ணம். அகதியாய் வாழும் ஒருவனின் வாழ்வியல் பாதிப்பில் அந்த நாடு, மொழி, கலாசாரம், பண்பியல் உணர்வுகள் தாக்கத்தினைக் கொடுப்பது இயல்பு. எனவே அம் மக்களின் இலக்கியங்களை -வாழ்வியல் நிகழ்வுகளை தம்மொழிக்கு கொணர்வதும் புகலிட இலக்கியப் பணிகளில் ஒன்றெனக் கருதுகின்றேன். ஆனால் பேராசிரியர் சி.சிவசேகரம் தம் உரையில் மொழி பெயர்ப்புகள் அவசியமற்றவை எனும் தொனியில் பேசியது சற்று அதிர்ச்சிக்குரியதாக விருந்தது. இன்று ஐரோப்பிய இலக்கிய உலகில் கலை இலக்கியத் துறையில் நவீன பரிசோதனைகள் தோன்றி புதிய தாக்கங்களை கொடுத்த வண்ணம் உள்ளன. ஆனால் அவை தமிழ் இலக்கியத் துறையில் கால்பதிக்க வைக்கவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் நவீன பரிசோதனைகள் தொடர்பாய் எம்மவர்களின் ஏற்றுக் கொள்ளும் பாரம்பரிய தயக்க மனப்பான்மை. இவ் இலக்கிய சந்திப்பு புதிய நவீன தேடல்களை நோக்கி நகர வேண்டும். அப்பொழுதான் சில பிரயோசனங்களையாவது தோற்றுவிக்க முடியும்.

''சினிமா''எனும் தலைப்பில் க.கலைச்செல்வன் அவர்களின் தலையில் ''மூன்றாம் உலக நாடுகளின் சினிமா'' எனும் விடயம் பற்றி யமுனா ராஜேந்திரன் அவர்கள் உரையாற்றினார்கள். புதிய தகவல்களையும். சினிமா தொடர்பான ஆக்கபூர்வமான சிந்தனைகளைப் பெறவும் இத் தலைப்பு உதவிற்று. மூன்றாம் உலக நாடுகளின் சினிமாத் துறையில் சிங்கள சினிமாக்களின் பங்கும் கணிசமானது. இவை பற்றியும் கவனத்தில் கொண்டிருக்கலாம். சில வேளை சிங்கள சினிமா தொடர்பான தகவல்களை பெற முடியாத சூழல் உருவாகி இருப்பின் இக்குறை தவிர்க்க முடியாதது. ஆனால் புறக்கணிக்கப்பட்டிருப்பின் ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

இரண்டாம் நாள் மு.புஸ்பராஜன் அவர்களின் தலைமையில் ''பேராசிரியர் கைலாசபதியும் அவருக்குப் பின்னரும்'' எனும் தலைப்பில் கலாநிதி எம்.ஏ.நுஃமான் அவர்கள் கருத்துரை வழங்கினார். பேராசிரியர் கைலாசபதி தொடர்பாக இன்றைய இலக்கிய உலகில் பல்தரப்பட்ட சர்ச்சைகள் உண்டு. தனிப்பட்ட முரண்பாடுகளினால் இவரைக் கடுமையாக விமர்சிக்கும் எஸ்.பொன்னுத்துரை போன்றவர்களை விடுத்து, தத்துவார்த்த அடிப்படையில் கைலாசபதி தொடர்பாக உள்ள விமர்சனங்களை நாம் கவனத்தில் கொள்ளல் அவசியம். ஆனால் எம்.ஏ.நுஃமானின் கருத்துக்கள் கைலாசப்தி அவர்களை 'அப்பழுக்கற்ற' கொள்கை வாதியாகவும், முற்போக்கு சிந்தினையாளனாகவும் வெளிக் காட்ட முயன்றதேயன்றி விமர்சனப் போக்கிலிருந்து ஆய்வு செய்ய உதவவில்லை. கைலாசபதி தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களும் எதிர்பார்த்தவாறு திருப்தியாய் அமையவில்லை. எமது இலக்கிய உலகம் பொய்மைகளின் கூடாரமாகவே இன்னும் திகழ்கின்றது. உண்மையான விமர்சனப் பாங்கு எவரிடமும் அற்று வரட்சி கொண்டு காணப்படுகின்றது. இது ஓர் துர்ப்பாக்கிய நிலை. இனி வரும் இலக்கிய உலகம் திருந்த வேண்டும்.

'தமிழ்ப் பெண்களும் புலம் பெயர்வும்'' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் உமா தலைமையில் இடம்பெற்றது. இதில் ''குடும்பமும் பெண்களும்'' எனும் தலைப்பில் பிரான்சிலிருந்து லஷ்சுமி அவர்கள் உரையாற்றினார்கள். இவரின் கருத்துக்கள் சம்பவங்களின் கோர்வையாகி பேச்சின் புரிதலை- கருத்துக்களின் வெளிப்பாட்டுத் தன்மையை மழுங்கடித்து விட்டதென்றே கூறவேண்டும். ஆண் - பெண் குடும்ப உறவுகளில் உருவாகி வரும் முரண்பாடுகள் பற்றிய சிந்தனைத் தெளிவின்றி இப்பேச்சு அமைந்ததினால் வீண் விவாதங்களுக்கு இத் தலைப்பு இடம் கொடுக்க வேண்டியதாயிற்று. கோட்பாட்டு ரீதியான கருத்துக்களையும், விவாதங்களையும் நிராகரித்து பெண்ணியம் தொடர்பாக பேச முனைவது பெண்களின் வாழ்வியல் மீதான பாரிய கவனங்களையும் அக்கறையையும் மலினப்படுத்தி மழுங்க அடித்து விடுகின்றது. இங்கே மிகவும் கொடுமையானது யாதெனின் கற்றறிந்த தங்களை முற்போக்காளர்களாக காட்டிக் கொள்ளும் பலர் இச் சந்திப்பில் இருந்தும் அவர்களின் பேச்சுக்களை கோட்பாட்டு ரீதியான விவாதங்களுக்கு இட்டுச் செல்ல வழி காட்டாமல் இவர்களின் தவறான கருத்துக்களுக்கு துணை போகும் தன்மை. இத் தவறுகள் இலக்கிய சந்திப்புகளின் பாரம்பரிய விதிகளாகி விட்ட போக்கு இலக்கிய சந்திப்பின் அபாயவழிப் பயணத்தையும், பூச்சிய நிலைத் தேடலையுமே கண்டிக்கின்றது. இனிவரும் காலங்களில் இலக்கிய சந்திப்புகளைப் பயன் சார்ந்த விடய நிலைக்கு உயர்த்துவது ஏற்பாட்டாளர்களின் கடமையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அரசியல் திருத்தங்கள்:
# சிறுபான்மையினர்க்கெதிராகவா?

ஜனாதிபதி தேர்தலுக்கு நாள் குறித்ததைத் தொடர்ந்து திரும்பவும் தேர்தல் திருவிழா ஆரம்பித்து விட்டது. பொது மக்கள் முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டி போட்டுக் கொண்டு தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கி விட்டன. இதனால் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஆரம்பித்த அரசியல் திருத்த முயற்சிகள் எல்லாவற்றையும் சந்திரிகா அரசு ''ஜனாதிபதி தேர்தலின் வெற்றிக்கு பின்னர்'' என பிற்போட்டுள்ளது.

அரசியல் திருத்தப் பிரேரணைகளில் பிரதான விடயம் எனக் கருதப்படும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றி பாராளுமன்ற முறையைக் கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தனது சம்மதத்தை அளித்த போதும், அதனைக் கைவிட்டு பொது மக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகியுள்ளது. தானாக மிகப் பெரியளவில் வருகின்ற வெற்றி வாய்ப்பை இழப்பதற்கு சந்திரிகா தயாராக இல்லை என்பதையே இந் நடவடிக்கை காட்டுகின்றது. மறு பக்கத்தில் அரசியலின் நெழிவு சுழிவுகளையெல்லாம் தனது ஆசான் ஜே.ஆரிடம் கற்றுத் தேர்ந்த காமினியும் மல்லுக் கட்டிக் கொண்டு போட்டிக்கு நிற்கின்றார். தேர்தலில் தோல்வி அடைவது நிச்சயம் என்பது தெரிந்தும் கூட தனது நீண்ட கால நலனுக்கு இத்தேர்தலை ஒரு முதலீடாக பயன்படுத்தவே அவர் முனைகின்றார்.

பொது மக்கள் முன்னணி ஐக்கிய தேசியக் கட்சி அரசியலமைப்பின் மோசமான பகுதிகளை மாற்றப் போகிறோம் என உரத்துக் கத்தும் போதெல்லாம் அதைவிட மிகவும் உரப்பாக, மாற்றத்துக்கு நாம் தயார் என காமினி அறிக்கை விடுகின்றார். எந்த ஆயுதத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக பொது மக்கள் முன்னணி பயன்படுத்துகின்றதோ அதனையே திரும்பவும் அவர்கள் மீது வீசிவிடுகின்ற கலையில் வல்லவராக காமினி நிற்கின்றார். இதனூடாக ஐக்கிய தேசியக் கட்சியின் தொலைந்த பிரமைகளை மீட்டெடுக்கும் மீட்பாளனாகவும் தோற்றமளிக்கின்றார்.

எனவே இருகட்சிகளினதும் அண்மைக் கால நடவடிக்கைகள் ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து அரசியலமைப்புத் திருத்தத்திற்கு, அவை தயாரென்பதையே காட்டுகின்றன. குறிப்பாக இரண்டு விடயங்களில் அரசியல் திருத்த மாற்றத்திற்கு அவை தம்மை தயார்படுத்துகின்றன. அவற்றில் ஒன்று ஜனாதிபதி அரசாங்க முறை, இரண்டாவது விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை. வழக்கம் போலவே ஒடுக்கப்படும் தேசிய இனங்களிடம் இது தொடர்பான அபிப்பிராயங்கள் எதுவும் கேட்கப்படாமலேயே இதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

இதில் ஜனாதிபதி முறைமையை மாற்றுதல் தொடர்பாக ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் நோக்கில் எனது கருத்துக்களை சரிநிகர் 56 இதழினூடாக தெரிவித்திருந்தேன். இவ்விதழில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் தொடர்பான எனது கருத்துக்களை முன்வைக்கின்றேன்.

பொதுத் தேர்தலில் மக்கள் அளிக்கும் வாக்குகளின் வீதாசாரத்திற்கு இணங்க பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் இவ்விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையை ஐக்கிய தேசியக் கட்சி தன்னுடைய சுய நலனுக்காகவே 1978ம் ஆண்டு அரசியல் திட்டத்தினூடாக கொண்டு வந்தது. இலங்கையில் நடைபெற்ற பெரும்பாலான தேர்தல்களில் (1956, 1994 தேர்தல் விதிவிலக்கு) சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி அமைத்த காலத்திலும் கூட, வீதாசார அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியே கூடுதலான வீதாசாரத்தைப் பெற்றிருந்தது. எனவே இதன் அடிப்படையிலான ஒருதேர்தல் முறை எப்போதும் தனக்கு சாதகமாக அமைந்திருக்கும் என்பதனை ஐக்கிய தேசியக் கட்சி தெளிவாக தெரிந்திருந்தது. இதைவிட இத்தேர்தல் மூலம் எந்த ஒரு கட்சியும் 2/3 பெரும்பான்மைப் பலத்தினை பெற முடியாத நிலை இருப்பதனால் திறந்த பொருளாதார முறைமையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் திட்டமும் மாறாத நிலையைக் கொண்டிருக்கும் என அது கருதியிருந்தது.

ஆனால் இன்று பிரதிநிதிகளுக்கும் மக்களுக்குமான தொடர்பு குறைந்துள்ளது. விருப்பு வாக்குமுறை கட்சிக்குள்ளேயே பகைமை உணர்வை வளர்த்துள்ளது என்பதைக் காரணம் காட்டி இருகட்சிகளுமே அதில் திருத்தங்களை கொண்டு வருவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளன.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி தனது பாராளுமன்ற தேர்தல் பிரகடனத்தின் மூலம் இவ் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை மாற்றி 50 வீதம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலும் மீதி 50 வீதம் பழைய தொகுதி வாரியான முறையிலும் அமையும் படியாக திருத்தத்தை கொண்டு வரப் போவதாக கூறியுள்ளது. 50 வீதத்தினை தேர்தல் தொகுதி முறைக்கு மாற்றும் போது எவ்வாறு தொகுதிகளை உருவாக்குவது அதில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பிரதிநிதித்துவம் எவ்வாறு இருக்கப் போகின்றது என்பது பற்றி எதுவும் திட்டவட்டமாகக் கூறப்படவில்லை. அது பற்றி ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கும் எந்தவித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்ட இவ்விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் அனுமதியில்லாமல் அறிமுகப்படுத்தப்பட்ட போதும், அவர்களைப் பொறுத்தவரை சில நல்ல விளைவுகளையும் ஏற்படுத்தியிருந்தது. அவற்றில் ஒன்று கணிசமானளவு ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் இருக்கின்ற இடங்களிலும் தமது பிரதிநிதிகளை அனுப்பக்கூடியதாக இருக்கின்ற நிலைமை. மற்றையது; அரசாங்கத்தை அமைக்கும் போது இவர்களின் பிரதிநிதிகளின் தயவையும் வேண்டி நிற்கின்ற நிலைமை.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் ஒழுங்காக நடைபெற்ற 94 ஒகஸ்ட் 16 தேர்தல் இதற்கு நல்ல எடுத்துக் காட்டு. இத்தேர்தலினூடாக கண்டி, பதுளை என்பவற்றில் இருந்தும் கூட மலையக மக்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பக் கூடியதாக் இருந்தது. மலையக வாக்கை அடிப்படையாக வைத்து தேசியப்பட்டியலிலிருந்தும் இரண்டு பிரதிநிதிகளை பேரம் பேசி பெறக் கூடியதாக இருந்தது. கொழும்பு மாவட்டத்தில் இத்தேர்தலில் தமிழ்ப் பிரதிநிதியை பெற்றுக் கொள்ள முடியாதிருந்த போதும் சென்ற தேர்தலில் பெறக் கூடியதாக இருந்தது. நுவரெலியா மாவட்டத்தில் நான்கு பிரதிநிதிகளை பெறக் கூடியதாக இருந்தது. முஸ்லீம் காங்கிரசைப் பொறுத்தவரையிலும் கூட இத்தேர்தல் முறையினாலே வன்னி மாவட்டத்திலிருந்து ஒரு பிரதிநிதியை பெறக்கூடியதாக இருந்தது.

இரண்டாவது விடயத்தைப் பொறுத்தவரையிலும் கூட கடந்த தேர்தல் நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இத்தேர்தலின் பின்னர் ஒடுக்கப்படும் தேசிய இனங்களினது பிரதிநிதிகளினது ஆதரவுடனேயே பொது மக்கள் முன்னணியினால் அரசாங்கத்தைக் கூட அமைக்கக் கூடிய நிலை தோன்றியுள்ளது. இத் தேசிய இனங்களது பிரச்சினைகள் தொடர்பாக சில விட்டுக் கொடுப்புகளை மேற்கொள்ள வேண்டிய நிலையையும், பேரினவாதத்தை அடக்கி வாசிக்க வேண்டிய நிலையையும் பேரினவாதிகளுக்கு ஏற்படுத்தியுள்ளது. பழைய தேர்தல் தொகுதி முறையின்படி தேர்தல் நடைபெற்றிருந்தால் எவரினதும் உதவியின்றி பொது மக்கள் முன்னணி அரசாங்கத்தினை இம்முறை அமைத்திருக்க முடியும்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சி தனது நலனில் இருந்து இத்தேர்தல் முறையை அறிமுகப்படுத்திய போதும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு மேற்கூறியவாறான இரண்டு முக்கிய விடயங்களைப் பொறுத்தவரை இது பயனுடையதாக உள்ளது. பொது மக்கள் ஐக்கிய முன்னணி சிபார்சு செய்யும் திருத்தத்தின் மூலம் இப்பயன்களை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ள முடியுமா? என்பது இன்று கேள்விக் குறியாக உள்ளது. நுணுக்கமாக அவதானிப்பின் இம்மாற்றங்கள் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு பாதகமாக அமைந்து விடக் கூடிய நிலையே காணப்படுகின்றது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் சிபார்சின்படி விகிதாசார தேர்தல் முறையில் தெரிவு செய்யப்படுபவர்கள் ஐம்பது வீதமாக குறைக்கப்படின் தேர்தல் மாவட்டங்களிலிருந்து இம்முறையினால் தெரிவு செய்யப்படுபவர்களின் தொகையும் சரி அரைவாசியாக குறைக்கப்படும். அவ்வாறு குறையும் போது ஒரு பிரதிநிதியை தெரிவு செய்யதற்கான வாக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். இந்நிலை ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் குறைவாக வாழ்கின்ற மாவட்டங்களிலிருந்து அவர்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட முடியாத நிலையை தோற்றுவிக்கும். குறிப்பாக, கொழும்பு, கண்டி, பதுளை மாவட்டங்களிலிருந்து தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படமுடியாத நிலை இதனால் தோற்றம் பெறும். அதுவும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சொந்தக் கட்சிகள் தனித்து போட்டியிட்டு பிரதிநிதிகளை தெரிவு செய்யும் நிலை அறவே இல்லாது போய்விடும்.

மீதி ஐம்பது வீதம் தொகுதிவாரியாக இருக்கின்றபோது ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு சாதகமான வகையில் தொகுதிகளை உருவாக்கும் போது மட்டுமே ஒரு சில பிரதிநிதிகளை அவர்களால் அனுப்ப முடியும். பழைய தொகுதி முறையே பின்பற்றப்படும் போது நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் இருபிரதிநிதிகள் வரலாம். ஏனைய பதுளை, கொழும்பு மாவட்டங்களில் பிரதிநிதிகளை தெரிவு செய்யமுடியாது. மொத்தத்தில் இவ்வாறான முறையை அறிமுகப்படுத்தும் போது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பிரதிநிதிகள் மிகக் குறைந்தளவில் தெரிவு செய்யப்படுவதற்கே வாய்ப்புகள் உள்ளன.

அரசாங்கத்தை அமைக்கும் விடயத்தில் கூட பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் திருத்தப் பிரேரணைகள் அறிமுகப்படுத்தப்படின் ஒடுக்கப்படும் தேசிய இனத்துப் பிரதிநிதிகளின் ஆதரவுகள் ஆட்சி அமைப்பவர்களுக்கு தேவையற்ற ஒன்றாகவே காணப்படும். தாங்கள் மட்டும் தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய நிலையை அவர்கள் பெற்றுவிடுவர். இதன் பின்னர் ஏனைய தேசிய இனங்கள் அவர்களுக்கு வேண்டாப் பொருளாகி விடுவர். பேரினவாதத்தையும் அடக்கி வாசிக்க வேண்டிய தேவையோ, நிர்ப்பந்தமோ அவர்களுக்கு ஏற்படாது. அதுவும் இம்மாற்றத்துடன் ஜனாதிபதி முறையையும் மாற்றுவித்தால், பேரினவாதத்தை அடக்கி வாசிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு அறவே இல்லாது போகும்.

பிறகென்ன? இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியது என்ற குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கும். இரண்டு பேரினவாதக் கட்சிகளும் அதற்கு கொடி பிடிக்கத் தொடங்கும்.

எனவே தேர்தல் முறையில் அரசு கொண்டுவரப் போகும் மாற்றம் தொடர்பாக ஒடுக்கப்படும் தேசிய இனத்து அமைப்புகள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். மாற்றங்களின் போது எங்களின் நிலை என்ன என்பதைத் தட்டிக் கேட்டல் வேண்டும். குறைந்தபட்சம் விகிதாசார முறையில் தங்களின் பிரதிநிதிகளை தெரிய முடியவில்லையென்றால் தொகுதிவாரி முறையில் எங்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படக்கூடிய வகையில் தொகுதிகளை உருவாக்க வேண்டும் என்பதை வற்புறுத்த வேண்டும்.

இலங்கையின் அரசியல் திட்ட வரலாற்றில் ஒவ்வோர் மாற்றத்தின் போதும் மறைமுகமான வகையில் இன ஒடுக்குதல் தன்மை காணப்பட்டே வந்தது. இம்முறையும் அது காணப்படுகின்றது. இது விடயத்தில் இலங்கையின் அரசியல் திட்ட வரலாறு என்பது சிறுபான்மை தேசிய இனங்களை ஒடுக்குவதற்கான சட்டங்களை உருவாக்கி வரலாறு என்பதை மறந்து விடுதல் கூடாது.

— சுந்தரலிங்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
4.ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 593615

பிரதம ஆசிரியர்: சேரன்

# தேவை எது?

ஐ.தே.க.வின் ஜனாதிபதி வேட்பாளரும், இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான காமினி திஸாநாயக்கா கொல்லப்பட்டு விட்டார்.

பாலத்துறையில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் வைக்கப்பட்ட அல்லது கொண்டுவரப்பட்ட குண்டு ஒன்று வெடித்த போது இக்கொலை நடந்துள்ளது.

காமினியுடன் கூடவே சிரேஷ்ட ஐ.தே.க. அரசியல்வாதிகளான காமினி விஜேயசேகர, பிரேமச்சந்திர, மல்லிமராச்சி ஆகியோரும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒ.ஸி. அபேயகுணசேகரவின் நிலை கவலைக்கிடமென அறிவிக்கப்படுகிறது.

கொலையாளிகள் யார் என்பதைக் கண்டுபிடிக்க சகல முயற்சிகளையும் மேற்கொள்ளப் போவதாக அரசு அறிவித்துள்ளது.

காலாவதியாகிப் போயிருந்த அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி மீளப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

கடைசியாகக் கிடைக்கின்ற தகவல்களின் படி ஜனாதிபதி பிரேமதாசவின் கொலையின் போது கண்டெடுக்கப்பட்ட பாபுவின் தலை போல ஒரு பெண்ணின் தலையொன்றை பொலிஸார் க்ண்டெடுத்துள்ளனர்.

ஏற்கனவே இலங்கையின் அண்மைக்கால அரசியலில் நாட்டைக் குலுக்கிய அதிர்ச்சியூட்டும் கொலைகள் பல நடந்து முடிந்து விட்டன. லலித் அத்துலத் முதலி, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச கொலைகள் இவற்றுள் மிகவும் முக்கியமானவை.

இவ்விருகொலைகளும் மாகாணசபைத் தேர்தலுக்கு சில நாட்கள் இருக்கும் போது நடைபெற்றவை.

இப்போது நடைபெற்றுள்ள காமினியின் கொலை ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் இரண்டு வாரங்களே உள்ள போது நடைபெற்றுள்ளது. முன்னைய கொலைகளின் சூத்திரதாரிகள் யார் என்பது இன்னமும் தெளிவாக்கப்படவில்லை. இன்னமும் விசாரணைகள் வெறும் ஊகங்களை மட்டுமே தந்து கொண்டிருக்கின்றன. இவ்வேளையில் இப்போது காமினியின் கொலையும் சேர்ந்து கொண்டுள்ளது.

ஆக, விசாரணைகளோ கொலையாளிகளைப் பிடிப்பதற்கான பொலிஸாரின் நடவடிக்கைகளோ, ஏன் அண்மைக்கால சமாதான முயற்சிகளோ எவையுமே இக்கொலைகள் தொடர்வதை தவிர்க்கும் சக்தியற்றவை என்பதையே இச்சம்பவங்கள் காட்டுகின்றன.

கொலையாளிகளை மிலேச்சத்தனமான காட்டுமிராண்டித்தனமான மற்றும் இன்னோரன்ன வார்த்தைகளால் திட்டிவிடுவதுடன் தமது கடமைகள் தீர்ந்து விட்டதாக எல்லா அரசியல்வாதிகளும், ஜனநாயகவாதிகளும் திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள்.

இந்தப் போக்கு உண்மையான கொலையாளிகளுக்கும் கூட வாய்ப்பாகி விடுகிறது. அவர்களும் கூட இதேமாதிரியான கண்டனங்களை இலகுவில் தெரிவித்து விடுகிறார்கள். சமயங்களில் கொலையாளிகள் யார் என்பது தெரியாமல் உலகமே தடுமாறிப் போய்விடுகிறது.

இவர்களுடன் சேர்ந்து, சரிநிகரும் 'கொலையாளிகள் யாராக இருந்தாலும் அவர்களது இந்தக் காட்டுமிராண்டித்தனமான கொலையை கண்டிப்பதாக' எழுதி விடலாம்.

ஆனால், இத்தகைய கொலைகள் நிகழ்வதற்கான சூழல் நிலவுகின்ற வரை இத்தகைய கண்டனங்கள் எந்தப் பயனையும் தரப்போவதில்லை.

கொலையாளிகள் இத்தகைய கொலைகளின் மிலேச்சத்தனத்தை புரிந்து கொள்ளாமல் செய்யவில்லை.

தமது நலன்களைக் காப்பாற்ற அல்லது இலட்சியங்களைப் பூர்த்தி செய்ய இதை ஒரு குறுக்கு வழியாக அவர்கள் கடைப்பிடிக்கிறார்கள்.

ஜனநாயகத்தை தலையில் வைத்துப் பூசிக்கும் அரசியல்வாதிகள் முதல் ஆயுதமுனைகளிலேயே எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியும் எனக் கருதும் புலிகளுள்ளிட்ட இராணுவவாதிகள் வரை எல்லோரும் இவ்வழியைக் கடைப்பிடிக்கிறார்கள்.

எனவே ஒவ்வொரு கொலையின் போதும் அதற்கு காரணமாக பலரைச் சந்தேகிக்க வேண்டியிருந்திருக்கிறது.

இந்நிலைமை உண்மையான கொலைகாரருக்கு வாய்ப்பாகியும் விடுகிறது.

கொல்லப்படுபவர்களின் சமூக அரசியல் நிலைப்பாடுகள் அவர்களது கொலையை வெவ்வேறு மட்டங்களிலாவது நியாயப்படுத்தியும் விடுகிறது.

இப்போது காமினியும் இப்போக்கிற்கு பலியாகி விட்டார்.

கொலையாளிகள் கைது செய்யப்படுவது முக்கியமானது தான். ஆனால் அதைவிட முக்கியமானது இத்தகைய கொலைகளுக்கான நிலைமைகளை இல்லாதொழிக்க முயல்வதே.

இது நடைமுறைப்படுத்தப்படாத வரை இத்தகைய கொலைகளை தவிர்ப்பது சாத்தியமே இல்லை.

இந்தக் கொலையுடனாவது இதற்கான முயற்சிகள் வலுவாகத் தொடங்கப்படுவது உணரப்படல் வேண்டும்.

அல்லாவிடில், நாட்டின் ஜனநாயக சூழல் மேலும் மோசமாக நசுக்கப்படும் ஒரு நிலையை நோக்கி, வெறும் மேடையில் மட்டுமல்ல, நாடுமுழுவதும் இரத்தங்கள் சிந்தும் ஒரு நிலையை நோக்கி நிலைமைகள் நகரக் கூடும்.

தேவை களைகளை அழிப்பதற்காக விளை நிலத்தை புண்ணாக்குவதல்ல; களைகளே தோன்றாவண்ணம் நிலத்தை பண்படுத்தலே!

***'.....ஒரு ஜனநாயக நாடு பயங்கரவாதத்தையும் கிளர்ச்சி வாதத்தையும் கூட நெறியல்லா வழிவகைகளைக் கையாண்டு போராட இயலாது. அவ்வாறு போராடுமிடத்தோ, போராடமுற்படுமிடத்தோ எதிர்க்கும் அரசிற்கும், எதிர்க்கப்படும் சக்திக்குமிடையே இருசாரரும் நெறியல்லா நெறியை கையாளும் தன்மையால் பேதம்காணவியலாது போய்விடுகிறது. இதன்விளைவாக அத்தகைய வழிமுறைகளைக் கையாள்வதால் எந்த மக்களை பாதுகாக்க முயல்வதாக அரசு சொல்லிக் கொள்கிறதோ அம்மக்களின் அனுதாபமும் ஒத்துழைப்பும் கிட்டாமல் அந்நியமாகிவிடுகின்றன. உள்நாட்டு யுத்தங்களில் துப்பாக்கியாலன்றி மக்களின் ஆதரவு மூலமே வெற்றிகாணப்படுகின்றது. அவ்வரசியல் போரில் ஒவ்வொரு நபருக்கும் இழைக்கப்பட்ட சித்திரவதையும் காரணமின்றி புரியப்பட்ட கொலையும், பயங்கரமூட்டப்பட்ட ஒவ்வொரு கிராமமும் காலாந்தரத்தில் மறுதரப்பின் வெற்றிநிலைக்கு அனுகூலமாகவே அமையும். இவ்வுண்மை வடக்கிலும் கிழக்கிலும் தெளிவாக நிரூபிக்கப்பட்டது. நாட்டின் ஏனைய பாகங்களிலும் இது உறுதியாக்கப்பட்டு வருகின்றது'.***

-றெஜி சிறிவர்த்தன

## திறந்த....

கச் சந்தை வெளிப்படுத்தும் பெறுமதிக் குறியீடாக விலைகளே வளங்களின் ஒதுக்கீட்டை நிர்ணயிக்கின்றன. சுய போட்டிச் சந்தை என்பது உற்பத்தி வளங்களை ஆகக் கூடிய பயனைத்தரும் வகையில் ஒதுக்கீடு செய்யும் ''கண்ணுக்குத் தென்படாக்கை'' (Invisible Hand) என ஸ்மித் வர்ணித்தார். இதனால் சுயமாக இயங்கும் சந்தைகளே தனிநபரின் சுய நலன்களை ஆகக்கூடிய மட்டத்தில் திருப்தி செய்யவல்லன என்றும் இப்படியாக ஒவ்வொரு தனிநபரும் தனது சுயநன்மையை அதிகப்படுத்தும் போது முழுச் சமூகத்தினதும் நலன்களும் அதிகப்படுத்தப்படுகின்றன என்றும் ஸ்மித் எழுதினார் சென்ற நூற்றாண்டில் இந்த முழுமையான போட்டிச் சந்தைக் கோட்பாடு தனிநபரின் பொருளாதார நடத்தையின் மாதிரியாக மெருகூட்டப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டது. இன்றைய காலகட்டத்தில் மேலாட்சி செலுத்தும் பொருளியல் கொள்கையாக இதுவே திகழ்கிறது.

நிஜ உலகில் தூய போட்டிச் சந்தைகளைக் காண்பதரிது. இன்றைய உலகில் தனி ஆதிக்க மூலதனமும் மையப்படுத்தப்பட்ட பாரிய தனியார்துறை நிறுவனங்களுமே பெரிய அளவில் சந்தைகளைக் கைப்பற்ற போட்டிபோடுகின்றன.

ஆயினும் இங்கு குறிப்பிட்ட தூய லிபரல் பொருளாதார மாதிரியிலிருந்தே பிரதான போக்கு பொருளியல் ஆய்வும் இன்றைய ''திறந்த பொருளாதாரக்'' கொள்கையின் கருத்தமைவுரீதியான நியாயப்பாடுகளும் பிறக்கின்றன. தனிநபரின் பொருளாதாரச் சுதந்திரத்தை கோட்பாட்டு மயப்படுத்த விளக்க, நியாயப்படுத்த இது தேவைப்படுகிறது. முடிந்தவரை கட்டுப்பாடுகளற்ற தனிநபர் பொருளாதாரச் சுதந்திரமே சுய போட்டிச் சந்தையின் இயக்கப்பாட்டின் உயிர்நாடி எனும் வாதம் பலமானது. இத்தகைய சுதந்திரம் ஒரு சிறுபான்மையினரைச் சொத்துடமையாளர்களாகவும் பெரும்பான்மையினரை உற்பத்திச் சாதனங்களற்றவர்களாகவும் ஆக்கும்; ஆக்கியுள்ளது. இதுவே முதலாளித்துவம். ஆனால் இந்த முதலாளித்துவம் அடம் ஸ்மித் கற்பனை செய்திருந்த சமநிலையிலுள்ள பெருந்தொகையான சிறு உற்பத்தியாளர்களின் சுய போட்டி உலகிலிருந்து வேறுபட்டது.

லிபரல் மரபின் சுயாதீன சமூகம் (சிவில் சமூகம்) பற்றிய கோட்பாட்டிற்கும் பொருளாதாரச் சுதந்திரமே அடிப்படையானது. அரசின் நேரடித் தலையீடற்ற பகுதியாக பொருளாதார செயற்பாடுகள் தனிநபர் சுதந்திரத்தின் அடிப்படையில் அமைதலே சுயாதீன சமூகத்தின் உத்தரவாதம் என்பது லிபரல் மரபின் சிந்தனைப் போக்குகளில் அடங்கும். அதே நேரம் லிபரலிசத்தின் அரசியல் தத்துவம் தனிநபரின் சமூக (அரசியல்) சுதந்திரங்களை முக்கியப்படுத்துகிறது. இங்கு சுவையானதென்னவெனில் லிபரல் அரசியல் தத்துவம்; அரசு பற்றி, அரசியல் அதிகாரம் பற்றி நிறையப் பேசுகிறது. ஆனால் பொருளாதாரம் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. மறுபுறம் லிபரல் பொருளாதாரத் தத்துவம் அரசியலைச் சட்டை செய்யவில்லை. கொள்கை மட்டத்தில் காணப்படும் இந்த இடைவெளி முரண்பாடு யதார்த்தத்திலும் பல வடிவங்களில் வெளிப்படுகிறது. மேற்கு ஐரோப்பாவின் வரலாற்றில் ஜனநாயக உரிமைகளுக்கும் சமூக நலன்களுக்குமான போராட்டங்கள் இந்த முரண்பாட்டை கூட அமைப்பு மட்டத்தில் நன்கு வெளிப்படுத்தியுள்ளன. சொத்துடமை உரிமைகளுக்கும் தனியுடமை உரிமைகளுக்குமிடையிலான முரண்பாடு லிபரலிசத்தின் ஒரு நிரந்தரப் பிரச்சினையாகும். இந்த வரலாற்றுப்பாடங்களைப் பற்றிப் பேச முன் மீண்டும் இலங்கை நிலைமைகளுக்குத் திரும்புவோம்.

## காமினி....

மில்லை என்றே தோன்றுகிறது! காமினியின் குழுவினர் இந்த கொலையை அடுத்து எடுத்த முயற்சிகள் ஐ.தே.கவினுள் நடந்த இழுபறி எல்லாம் இதையே காட்டுகின்றன.

### சிறிமாவை கொண்டு வருவதற்கான முயற்சி

முழு நாடுமே காமினி கொலையால் அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கும் வேளையில் காமினி ஆதரவாளர்கள் இக்கொலைச் சம்பவத்தை தமது அரசியல் லாபத்துக்கு பயன்படுத்தியதை அப்பட்டமாகக் காணக்கூடியதாக இருந்தது. ஐ.தே.க. பலவீனமுற்றிருந்த இவ்வேளை, காமினி மற்றும் ஏனைய முக்கியஸ்தர்களது மரண அனுதாப அலையை ஜனாதிபதித் தேர்தலுக்கான உரமாக பயன்படுத்திக் கொள்ளும் முயற்சி தெளிவாக வெளிப்பட்டது.

காமினியின் பூதவுடல் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த அவரது பம்பலப்பிட்டி இல்லத்தில் பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள், காமினியின் உருவப்படம் கொண்ட ஸ்டிக்கர்கள், விநியோகிக்கப்பட்டன. கூடவே காமினியும் அவரது துணைவியாரான சிறிமாவும் சிரித்த முகத்துடனுள்ள கலர் படங்களும் விநியோகிக்கப்பட்டன.

இவ்வாறான துயர் சூழ்ந்த நேரத்தில் காமினியின் மனைவி சிறிமாவை முக்கியப்படுத்திய படங்கள் விநியோகிக்கப்பட்டமை; அவரை காமினியின் இடத்துக்கு கொண்டு வருவதற்கான முயற்சி என்பது தெளிவாகத் தெரிந்தது.

இதற்கான முயற்சிகளை சிறிமாவின் சகோதரரான கலாநிதி விக்கிரம வீரசூரிய கடுமையாக மேற்கொண்டதாக சிறிகொத வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர் ஐ.தே.கவினுள் உள்ள பலமான நபரென்பது அறிந்ததே. முன்னர் காமினி ஐ.தே.கவினுள் மீண்டும் இணைவதற்கான முயற்சிகளை இவரே மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போதைய தேர்தல் பிரச்சார வேலைகளுக்கு பொறுப்பாகவும் இவரே நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவரது தூண்டுதலாலேயே ஒக்.25ம் திகதியன்று சிறிகொதவின் முன்னாள் 'சிறிமாவை ஜனாதிபதி வேட்பாளராக்கு' என்ற சுலோகத்தைக் கொண்ட ஆர்ப்பாட்டம் நடந்தது எனத் தெரியவருகிறது. இதன் பலன் அன்று மாலையே வெளிப்பட்டது. அன்றைய மாலையே சிறிமா ஜனாதிபதி வேட்பாளராக ஐ.தே.கவால் நியமிக்கப்பட்டார். ரணிலுக்கு எதிர்க்கட்சித் தலைவரானார்.

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்